பக்கங்கள் : பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 15 வெள்ளிக்கிழமை (28.03.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 123

# 13ஆவது திருத்தச் சட்ட அமுலை

# ஒருபோதும் தமிழர்கள் ஏற்கார்!

## அது மிகவும் பின்னடைவானது என்கிறார் சம்பந்தன்



கொழும்பு,மார்ச்28

13ஆவது திருத்தச் சட்டம் கொண்டுவரப்பட்ட காலம் முதல் இது நாள் வரையில் அது முறையாக அமுல்படுத்தப்படவில்லை. இதனை அமுல்படுத்தும் நடவடிக்கைகளில் ஆட்சியிலிருந்த எந்தவொரு அரசும் நடவடிக்கை எடுக்கவில்லை. அதனை மீள தூசுதட்ட முனைவதை தமிழர் தரப்பு ஒருபோதும் ஏற்றுக் கொள்ளாது. அது மிகவும் பின்னடைவானது என்பது மிகவும் தெட்டத் தெளிவானது. இவ்வாறு தமிழர் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத்தலைவர் இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

தேசிய சமாதானப்பேரவை ஏற்பாடு செய்திருந்த 'தேசியப் பிரச்சினை மற்றும் 13ஆவது திருத்தம் பற்றிய கருத்தரங்கு' மற்றும் 'இரு தசாப்த கால யுத்தத்தால் ஐந்து வருட யுத்த நிறுத்தம். அடுத்தது என்ன?' என்ற நூல் [illegible] வெளியீடு ஆகியன நேற்று முன்தினம் கொழும்பு ஜே.ஆர்.ஜெயவர்த்தன கேந்திர மண்டபத்தில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே இரா. சம்பந்தன் இதனைத் தெரிவித்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை இன்று இடம்பெறும்

யாழ்ப்பாணம்,மார்ச்28

காங்கேசன்துறைக்கும் திருகோணமலைக்கும் இடையிலான கப்பல் சேவை இன்று வெள்ளிக்கிழமை இடம்பெறும் என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் (26.03.2008) புதன்கிழமையும் இன்று (28.03.2008) வெள்ளிக்கிழமையும் பிரயாணம் செய்வதற்கென அனுமதிச் சீட்டுப் பெற்றவர்கள் இன்று வெள்ளிக்கிழமை பயணத்தை மேற்கொள்ளலாம் என்றும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் நேற்றும் விமானக் குண்டுவீச்சு

கொழும்பு,மார்ச்28

விமானப் படையினரின் கிபிர் விமானங்கள் நேற்றும் வன்னியில் இரு வேறு பகுதிகளில் விமானத் தாக்குதல்களை நடத்தியிருக்கின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டம், இரணமடுவுக்குக் கிழக்கே உள்ள கல்மடுக்குளம் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் சீனாவுக்கு எதிரான விவாதத்தை பாகிஸ்தானுடன் சேர்ந்து இலங்கை தடுத்தது!

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச் 28

திபெத்தின் தற்போதைய நிலைவரம் குறித்த விவாதம் ஒன்ம் கடந்த செவ்வாய்க்கிழமை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் கவுன்ஸிலின் கூட்டத்தில் ஆரம்பமானவேளை, சீனாவுடன் இணைந்து இலங்கை அதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததாகவும் -

இதன் காரணமாக அந்த விவாதம் கைவிடப்பட்டதாகவும் -

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

ஆஸ்திரேலியா, ஸ்லோவேனியா, சுவிட்ஸர்லாந்து, அமெரிக்கா உட்படப் பல நாடுகளும் அரச சார்பற்ற அமைப்புகளும் திபெத் விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்தன என மனித உரிமைகள் கண்காணிப்பகம் மேலும் தெரிவித்துள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டு இராணுவ விநியோக கடற்பாதை இப்போது எங்கள் கட்டுப்பாட்டில் உள்ளது

### புலிகளின் இராணுவப் பேச்சாளர் சொல்கிறார்

மெல்போர்ண்,மார்ச்28

குடாநாட்டில் உள்ள இராணுவத்தினருக்கான விநியோகம் நடைபெறும் கடற்பாதை இப்போது எமது கட்டுப்பாட்டில் உள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் முல்லைத்தீவுக் கடற்பரப்பில் நாம் நடத்திய கரும்புலித் தாக்குதலின் விளைவு இது. இவ்வாறு தெரிவித்திருக்கிறார் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன்.

ஆஸ்திரேலியாவின் தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனை தெரிவித்திருக்கிறார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது: - கடந்த சில தினங்களுக்கு முன்னர் முல்லைத்தீவு கடற்பரப்பில் இடம்பெற்ற கரும்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அடம்பனில் கண்ணிவெடி விபத்தில் 4 படையினர் பலி

கொழும்பு,மார்ச் 28

மன்னார் மாவட்டத்திலுள்ள சின்ன மருதமடு, அடம்பன் மற்றும் கோயில்மோட்டை ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் முற்பகல் இராணுவத்தினர் நிலக்கண்ணிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை அவை தவறுதலாக வெடித்ததில் சம்பவ இடத்திலேயே 4 படையினர் உயிரிழந்தனர். மேலும் 8 படையினர் படுகாயமடைந்தனர்.

இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார இத்தகவலைத் தெரிவித்தார்.

காயமடைந்த படையினர் உடனடியாக அநுராதபுர வைத்தியசாலையில் சிகிச்சைக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## கொசோவோவை ஒத்த நிலையை நோக்கி இப்போது இலங்கையும்!

### வீரவன்ஸ எச்சரிக்கிறார்



கொழும்பு,மார்ச் 28

இலங்கையின் நிலைமை இப்போது கொசோவோவை ஒத்ததன்மைக்கு - நிலைமைக்கு - மாறி வருகிறது. இந்நாட்டின் தற்போதைய நிலைமை, கொசோவோ சுதந்திரத்தை - பிரகடனம் செய்வதற்கு முன்பிருந்த அதேமாதிரியான - ஒத்த நிலையில் உள்ளது.

ஐ.நா. சபையின் மனித உரிமைகளுக்கான விசேட ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் வெளியிட்ட அறிக்கை ஒன்றே அந்நாட்டை சுதந்திரப் பிரகடனத்துக்கு உந்தித்தள்ளியது. அவ்வாறு நோக்குகையில் இலங்கையிலும் கொசோவோவில் இடம்பெற்றது போன்ற மாற்றம் ஏற்படலாம்.

- இவ்வாறு தெரிவித்தார் ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவரும் தேசிய தேசப்பற்றாளர் இயக்கத்தின் பொதுச் செயலாளருமான விமல் வீரவன்ஸ.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை அவர் நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் இலங்கையின் இப்போதைய நிலைமையையும் கொசோவோவின் முன்னைய நிலைமையையும் விரிவாக ஒப்பிட்டுக் கருத்துக் கூறினார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

**இந்துக்களின் துடுப்பாட்டம்**
உதயனின் விசேட போட்டி விவரம்
உள்ளே எட்டாம் பக்கத்தில்

## ஊடகவியலாளர் மீதான தாக்குதல்களை நிறுத்துமாறு சர்வதேச ஊடக அமைப்புகள் மஹிந்தவுக்குக் கடிதம்

கொழும்பு,மார்ச் 28

இலங்கை ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதலை நிறுத்துமாறு உலக ஊடக சுதந்திர இயக்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைத் தீவில் உள்ள ஊடகவியலாளர்களின் பாதுகாப்புத் தொடர்பில் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த ஊடகவியலாளர் சங்கங்கள், ஊடக சுதந்திரம் மற்றும் மனித உரிமைகளுக்கான அமைப்புக்கள் சார்ந்த முப்பதுக்கும் மேற்பட்ட அமைப்புக்கள் வெளியிட்டுள்ள கவலை தொடர்பாக சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளனம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நேற்று வியாழக்கிழமை கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது.

அரச அதிகாரிகள் மற்றும் அதன் பிரதிநிதிகளால் ஊடகவியலாளர்களுக்கு எதிராக

(12ஆம் பக்கம் பார்க்க)

KOKUVIL HINDU COLLEGE
JHC vs KHC BATTLE OF THE HINDUS
JAFFNA HINDU COLLEGE
OFFICIAL MEDIA SPONSOR: உதயன் @ Kokuvil Hindu College grounds 29th & 30th of March 2008

**கோதுமை மா : ரூபா 82, சீனி : ரூபா 70, பருப்பு : ரூபா 140**

# அத்தியாவசியப் பொருள்கள் சங்கங்கள் ஊடாக விநியோகம்

யாய்ப்பாணம்,மார்ச்.28

குடாநாட்டுக்கு கப்பல் மூலம் எடுத்துவரப்பட்டுள்ள கோதுமை மா, சீனி, பருப்பு ஆகியன ப.நோ.கூ. சங்கங்கள் மூலம் விநியோகம் செய்யப்படவிருக்கின்றன.

யாழ். அரச அதிபர் கே.கணேஷ் இதனைத் தெரிவித்தார்.

இந்தப் பொருள்கள் ப.நோ.கூ.சங்கங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. சங்கங்கள் தமக்குரிய வழங்கற் கட்டளைகளை இன்று மாவட்ட புனர்வாழ்வு, புனரமைப்பு செயலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் தேவையைக் கவனத்தில் கொண்டு பொருள்களை விநியோகிக்குமாறு அரச அதிபர் ப.நோ.கூ. சங்கங்களைக் கேட்டுள்ளார்.

ஒரு கிலோ கிராம் மாவின் விற்பனை விலை 82/= ஆகவும். ஒரு கிலோ கிராம் சீனியின் விற்பனை விலை 70/= ஆகவும். ஒரு கிலோ கிராம் பருப்பின் விற்பனை விலை 140/= ஆகவும். விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது - என்றும் அரசாங்க அதிபர் தெரிவித்தார்.(அ-1)

## கண்ணீர் அஞ்சலி

2007 பிரிவு மருத்துவ மாது பயிற்சி பெறும் தாதிய உத்தியோகத்தர் திருமதி ஆனந்தகுமாரி விஜயலட்சுமி அவர்களின் அன்புத் தந்தை

### நாகப்பர் வல்லிபுரம்

அவர்களது மறைவிற்காக எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்

அதிபர், போதனாசிரியர்கள்,
2004 'A' பிரிவு, 2004 'B' பிரிவு,
2006 'A' பிரிவு, 2006 II பிரிவு
தாதிய மாணவர்கள், மருத்துவமாது பயிற்சி பெறும் தாதிய உத்தியோகத்தர்கள்,
துணை உத்தியோகத்தர்கள்.

தாதிய பயிற்சிக் கல்லூரி,
யாழ்ப்பாணம் (72496)

## கல்வி நிதி வழங்கல் நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம்,மார்ச்28

'சொண்ட்' அரச சார்பற்ற நிறுவனத்தினால் கோப்பாய் பிரதேச செயலர் பிரிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட வசதி குறைந்த மாணவர்களுக்கான மாதாந்த கல்வி நிதி வழங்கலின் ஆரம்ப வைபவம் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் மற்றும் கோப்பாய் பிரதேச செயலக சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் ஆகியோர் கலந்து கொள்வர்.

இவர்களுக்கான உதவி நிதியை வழங்கவுள்ளதுடன் இச் செயற்பாட்டில் குறிப்பிட்ட பிரதேச செயலர் பிரிவிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 55 மாணவர்களுக்கு இந்த உதவி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (அ-1)

## மரண அறிவித்தல்

### முருகேசு நமசிவாயம்

(ஓய்வு பெற்ற அதிபர் )



தொல்புரம் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு நமசிவாயம் 26.03.2008 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - சிதம்பரம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான தியாகராசா - செல்லம்மா தம்பதியரின் மருமகனும் லீலாவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான அன்னம்மா, கண்ணாம்பிகை, சுப்பிரமணியம் ஆகியோரின் சகோதரனும் மற்றும் புஸ்பமாலா, புஸ்பகுமார், புஸ்பகலா (ஆஸ்திரேலியா)ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவபாலன், கிருஷ்ணமணி ஆகியோரின் அன்பு மாமனாரும் மாலசுதன், பாலசுவர்ணா, ஜனகன், வைஸ்ணவன், சரவணன், பிரதீபா (ஆஸ்திரேலியா), பிரசீலன் (ஆஸ்திரேலியா), பாரதி, கஜேந்திரன் ஆகியோரின் பாசமிகு பேரனும் சுருதிகாவின் பாசமிகு பூட்டனாரும் ஆவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (29.03.2008) சனிக்கிழமை மு.ப 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந.புஸ்பகுமார் (மகன்)

*தொல்புரம் கிழக்கு, சுழிபுரம்.* (72495)

### திருமதி பரிமளம் விசுவாசம்

மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் கரந்தன் மேற்கு, நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரிமளம் விசுவாசம் நேற்று முன்தினம் (26.03.2008) புதன்கிழமை காலமானார்

அன்னார் வைத்தியாம்பிள்ளை விசுவாசத்தின் அன்பு மனைவியும் வரதராசா(அலெக்ஸ்), ஆனந்தராசா, இதயராசா, மேரி நிர்மலா (செல்வா), ரவிராசா(பிரான்ஸ்) மேரி சசிகலா, பிறேமதாசன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மாலினி, விக்னேஸ்வரி, சகுந்தலாதேவி(சாரதா), ஞானசோதி, சசிகலா(பிரான்ஸ்), இராசநாயகம்(முகாமைத்துவ உதவியாளர், சமூக நலத்துறைத் திணைக்களம், யாழ்ப்பாணம்), சுதா(லண்டன்) ஆகியோரின் மாமியாரும் காலஞ்சென்ற நவரத்தினம், சின்னராசா, கண்ணம்மா, குணரத்தினம்(பப்பன்), ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு நேற்று(27.03.2008) வியாழக்கிழமை பி.ப. 3 மணிக்கு உரும்பிராய் சென்.மைக்கல் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் சென்.மைக்கல் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா.இராசநாயகம் (மருமகன்)

*கரந்தன் மேற்கு, நீர்வேலி.* (72489)

## திறந்த பல்கலை. பரீட்சை செங்குந்த இந்துவில் நாளை

யாழ்ப்பாணம்,மார்ச்28

திறந்த பல்கலைக்கழகத்தின் எந்திரவியல் டிப்ளோமா இளமாணிக்கான ஆங்கில தரப்படுத்தல் பரீட்சை நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரியிலேயே இடம்பெறவுள்ளது.

இந்தப் பரீட்சை திறந்த பல்கலைக்கழகத்தின் பிராந்திய அலுவலகத்தில் இடம்பெறும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும் இப்பரீட்சை செங்குந்த இந்துக் கல்லூரியிலேயே இடம்பெறும் என்று இணைப்பாளர் அறிவித்துள்ளார். (அ-1)

## ஜே.வி.பியின் எம்.பி. வாகன விபத்தில் காயம்

கொழும்பு,மார்ச்28

ஜே.வி.பியின் காலி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேன விஜேசிங்க பயணம் செய்த வாகனம் நேற்று காலிக்கு அண்மித்த உணவட்டுன, தலவெல்லப் பகுதியில் விபத்துகுள்ளானதில் அவர் மிக மோசமாகப் படுகாயமடைந்தார். எனினும் அவர் ஆபத்தான கட்டத்தைத் தாண்டிவிட்டார் என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

அம்பாறையில் இருந்து காலி நோக்கி வந்து கொண்டிருக்கையில் நேற்றுக் காலை அவரது வாகனம் விபத்துக்குள்ளானது எனத் தெரிவிக்கப்படுகின்றது. அவரது வாகனம் பலத்த சேதமடைந்தது.

படுகாயமடைந்த சந்திரசேன விஜேசிங்க காலி, கரப்பிட்டிய வைத்தியசாலையில் உடனடியாகச் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டார். அவர் தற்போது ஆபத்தான கட்டத்தைத் தாண்டி விட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (சி)




# அழைக்கின்றோம்

"இதோ! நான் உன் அருகில்......"

உயிர்ப்பு பஜனை

உடுவில் மகளிர் கல்லூரி

இடம் : உடுவில் கல்லூரி மண்டபம்
காலம் : இன்று(28.03.2008) வெள்ளிக்கிழமை
நேரம் : பி.ப. 3.30 மணி


## மரண அறிவித்தல்கள்

### திருமதி அல்பிறேட் நீற்மலர் (புஸ்பம்)

(ஓய்வுபெற்ற சுங்க இலாகா ஊழியரின் மனைவி)



ஆஸ்பத்திரி வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அல்பிறேட் நீற்மலர் (புஸ்பம்) நேற்றுமுன்தினம் (26.03.2008) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மரிசலீன் - றோசலியின் அன்பு மகளும், காலஞ்சென்ற அல்பிறேட்டின் அன்பு மனைவியும், பசில் லொட்றிக்கோ (கலிஸ்ரன் -பிரான்ஸ்), பேனாட் (றோஜன் - றோயல் பான்சி கவுஸ்), பற்றீசியாராணி (வசந்தினி) ஆகியோரின் பாசமிகு தாயும், உஷா நந்தினியின் (பிரான்ஸ்) அன்பு மாமியாரும், மொறீனா, மெரீனா ஆகியோரின் பேர்த்தியும், றோஸ்மலர், காலஞ்சென்ற பாக்கியநாதன், யோசேவ், விக்டர் (பிரான்ஸ்) ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற பரஞ்சோதி மற்றும் வைலற், ஜெயமணி (கொழும்பு), செபமலர் (பிரான்ஸ்), காலஞ்சென்ற எட்வேட்மலர் மற்றும் இராஜநாயகம் (பிரான்ஸ்), நவம், லில்லி, பாலசிங்கம் (பிரான்ஸ்), பெனடிற் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (28.03.2008) வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புனித அடைக்கல அன்னை ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு, பூதவுடல் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பேனாட் றோஜன் (மகன்)

*334 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.* (72492)

### துரைராஜா சிவநேசன்

( முன்னாள் உத்தியோகத்தர், சிமெந்து தொழிற்சாலை)



கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட துரைராஜா சிவநேசன்.நேற்று (27.03.2008) வியாழக்கிழமை பி.ப 1.55 மணியளவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைராஜா - பரமேஸ்வரி தம்பதியரின் மூத்த புதல்வனும்,திரு. திருமதி சதாசிவம் - சரஸ்வதியின் அன்பு மருமகனும், தவச்செல்வியின் அன்புக் கணவரும், கஜானந்தன் (மாணவன் யா/ மத்தியகல்லூரி தரம் 10D), பிரவீனா (மாணவி யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி தரம் 8B), ஆகியோரின் அன்புத் தந்தையும் செல்வரதி, குகநேசன், தவநேசன், குணநேசன், புவநேசன் ஆகியோரின் சகோதரனும், சதானந்தன், இரட்ணபாலா, சந்திரபாலா, சூரியபாலா, உதயபாலி, உதயகலா, கருணபாலா ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2008) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பிற்பகல் 2 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள்
(மகா சில்க்ஸ் - யாழ்ப்பாணம்)

*நாமகள் லேன், கொக்குவில் கிழக்கு.* (72497)

### செல்வி டயனா சகுந்தலா சபாபதிபிள்ளை

(ஓய்வுபெற்ற ஆசிரியை, டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் மானிப்பாயை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி டயனா சகுந்தலா சபாபதிபிள்ளை நேற்று (27.03.2008) வியாழக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி S.S.சபாபதிபிள்ளையின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான டேயிசி இராஜேந்திரா, ஜோர்ஜ், ஜெயம், பாலா, செல்வா, ராணி மற்றும் குலம், இராஜேந்திரா, விமலா ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரது நல்லடக்க ஆராதனை நாளை (29.03.2008) சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஜோய்லின் இல்லம், உடுவில் வீதி, மானிப்பாயில் நடைபெற்று மானிப்பாய் திருச்சபை கல்லறைத் தோட்டத்தில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இராஜேந்திரா சபாபதிபிள்ளை (சகோதரன்)

*'ஜோய்லின்', மானிப்பாய் வடக்கு.* (72499)

### திருமதி காசிநாதர் சிவயோகம்

கரம்பகம், எழுதுமட்டுவாளைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி காசிநாதர் சிவயோகம் நேற்று (27.03.2007) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் அமரர் தம்பையா காசிநாதரின் அன்பு மனைவியும் தவமணி, குலசிங்கம், குணசிங்கம்(அதிபர், யா/ குடமியன் அ.த.க. பாடசாலை) புலேந்திரன், இராசதுரை(கலாசார உத்தியோகத்தர், சாவகச்சேரி பிரதேச செயலகம்) துரைராசா ஆகியோரின் அன்புத் தாயும் நல்லதம்பி(ப.நோ.கூ.ச. கிளை முகாமையாளர்) வாணி(ஆசிரியை, யா/கச்சாய் அ.த.க. பாடசாலை), நந்தினி ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (28.03.2008) வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணியளவில் ஒட்டங்கேணி வீதிச் சந்தி, கச்சாய் வீதி, கொகாமத்திலுள்ள தற்காலிக இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

(a)

# இந்துக்களின் துடுப்பாட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

யாழ்.இந்து - கொக்குவில் இந்துக்கல்லூரிக்கு இடையிலான 'இந்துக்களின் துடுப்பாட்டம்' ( BATTLE OF THE HINDUS) நாளை சனிக்கிழமை ஆரம்பம்மாகிறது. நாளை ஆரம்பமாகும் இந்தப் போட்டி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறும்.

இரு கல்லூரிக்கும் இடையே இடம்பெறவுள்ள முதலாவது மிகப் பெரிய துடுப்பாட்டப் போட்டி இதுவாகும்.

கொக்குவில் இந்துக்கல்லூரி அதிபர் ஏ.அகிலதாஸ் தலைமையில் சனிக்கிழமை காலை 8மணிக்கு கொகுவில் இந்து மைதானத்தில் போட்டி ஆரம்பமாகும். இந்தப் போட்டிக்குப் பிரதம விருந்தினராக 'செலிங்கோ இன்சுரனஸ்' நிறுவனத்தின் பிராந்திய விற்பனை முகாமையாளர் பி.நந்திக்குமரனும், சிறப்பு விருந்தினராக ஈ.எஸ்.பி. நிறுவனத்தின் உரிமையாளர் எஸ்.பி.நாகரட்ணமும் கலந்து கொள்வார்கள்.

சனிக்கிழமை காலை 8 மணிக்கு இடம்பெறும் ஆரம்ப நிகழ்வை தொடர்ந்து காலை 10மணிக்குப் போட்டி ஆரம்பமாகும்.

கொக்குவில் இந்துக்கல்லூரி அணிக்கு இ.வாகீசும், யாழ்.இந்துக்கல்லூரி அணிக்கு தி.கௌசிகனும் தலைமை தாங்குகின்றார்கள்.

இரு அணிகளுமே சமநிலையில் காணப்படுகின்றன. சிறந்த துடுப்பாட்ட வீரர்களையும், சிறந்த பந்துவீச்சாளர்களையும் கொண்டுள்ள இரு கல்லூரிகளின் அணிகளும் இவ்வாண்டு இடம்பெற்று வரும் பருககாலப் போட்டிகளின் போது மிகச் சிறந்த முறையில் தமது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இதனால் இந்தப் போட்டி மிகவும் விறுவிறுப்பாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (50)

## நாளை கொக்குவில் இந்து மைதானத்தில் ஆரம்பம்



யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி துடுப்பாட்ட அணி
அமர்ந்திருப்பவர்கள் (இ-வ):
சண்தயாளன் (அணி ஆலோசகர்), பா.ஜெயரட்ணராஜா (பொறுப்பாசிரியர்), பொ.சிறீஸ்கந்தராஜா (உப அதிபர்), செல்வன் அ.அஜித் (அணி உபதலைவர்), வி.கணேசராசா (அதிபர்), தி.கௌசிகன் (அணித்தலைவர்), பொ.மகேஸ்வரன் (பிரதி அதிபர்), ச.நிமலன் (விளையாட்டுப் பொறுப்பாசிரியர்), ந.சிவராஜ் (பயிற்றுநர்).
நிற்பவர்கள் (இ-வ): செல்வன் சி.செந்தூரன், இ.அருண்ராஜ், சு.பிரசன்னா, சே.யாதவன், தி.கோசிகன், பா.சங்கீதன், செ.பவசுதன், இ.நிருஜன், க.டிலான், ந.சுதாகரன், அ.பிரியதர்ஷன், ரா.சிந்துஜன், ஸ்ரீ.மயூலக்ஷன், த.சிந்துஜன்.



கொக்குவில் இந்துக்கல்லூரி துடுப்பாட்ட அணி
அமர்ந்திருப்பவர்கள் (இ-வ):
ஆர்.எஸ்.உமாசுதன், இ.வாகீஸ் (அணித்தலைவர்), ஏ.அகிலதாஸ் (அதிபர்), எஸ்.வல்லவக்குமரன் (அணி உபதலைவர்), எஸ்.கோகுலன் (பயிற்றுநர்), ஆர்.ஜெகதீஸ்வரன் (பொறுப்பாசிரியர்).
நிற்பவர்கள் (இ-வ):
ரி.துவாகரன், வி.ஜனார்த்தனன், பி.ரெவிசன், ரி.லக்ஸ்ஷன், எஸ்.ஜனுகுலன், ஆர்.நிருஜன், பி.நிதர்ஷன், கே.நிரோஜன், ஆர்.நேசன், சி.கோபிகன், எஸ்.மயூரன், கே.ஜனுதாஸ், எஸ்.உத்தமக்குமரன், எஸ்.நிரோஜன்.

Official Media Sponsor
உதயன்



### ஆட்ட நேரம்

சனிக்கிழமை - காலை 8 மணிக்கு ஆரம்ப நிகழ்வு.
10.00 - 12.00, 12.40 - 2.40, 3.00 - 5.00

ஞாயிற்றுக்கிழமை
10.00 - 12.00, 12.40 - 2.40, 3.00 - 5.00

### பந்துவீச்சாளர்கள் சாதனை புரிவர்

எமது அணி 7 பந்துவீச்சாளர்களைக் கொண்டுள்ளது. இதில் இருவர் சுழற்பந்து வீச்சாளர்கள். 5 பேர் வேகப்பந்து வீச்சாளர்கள். அத்துடன் துடுப்பாட்டத்தில் எமது அணி மிகவும் பலமான நிலையில் உள்ளது. இவ்வாண்டு நான்கு முதல்தரப் போட்டிகளில் பங்குபற்றியிருக்கின்றோம். இதில் ஒரு போட்டியில் வெற்றிபெற்றோம். மற்றொரு போட்டி சமநிலையில் முடிந்தது. ஏனைய இரண்டு போட்டிகள் தோல்வியில் முடிந்தன. இந்தப் போட்டி கள்மூலம் நாம் நல்ல அனுபவத்தைப் பெற்றிருக்கிறோம். இதனால் இந்தப் போட்டியில் அதிக எதிர்பார்புடன் களமிறங்குகின்றோம். எமது பந்து வீச்சாளர்கள் எதிரணிக்குப் பெரும் சவாலாக இருப்பார்கள்.

இது இரு கல்லூரிகளுக்கு இடையிலான முதலாவது மிகப்பெரிய மோதல் என்பதால் இதில் நாம் நிச்சயம் வெற்றிபெற வேண்டும் என்ற நம்பிக்கையுடன் களமிறங்குகின்றோம்.

யாழ்.இந்துக்கல்லூரி அணித் தலைவர் தி.கௌசிகன்

### துடுப்பாட்ட வீரர் துவம்சம் செய்வர்

எமது அணி சிறந்த துடுப்பாட்ட வீரர்களையும் 5 திறமையான பந்து வீச்சாளர்களையும் கொண்டுள்ளது. இரண்டு சுழல்பந்து வீச்சாளர்களும் மூன்று வேகப்பந்து வீச்சாளர்களும் இதில் அடங்குகின்றனர். அத்துடன் எமது அணியில் மூன்று துடுப்பாட்ட வீரர்கள் இவ்வாண்டு இடம்பெற்ற முதல்தரப் போட்டியில் சதம் அடித்துள் ளார்கள்.

கடந்த மூன்று மாதகாலமாக கடுமையான பயிற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். துடுப்பாட்டத்தில் எமது அணி மிகவும் பலம்வாய்ந்த நிலையில் உள்ளது. அத்துடன் பந்து வீச்சாளர்களும் எதிரணியினரை நிலைகுலையச் செய்யும் வலிமையைக் கொண்டுள்ளனர். எனவே நிச்சயம் நாம் எதிரணிக்குப் பெரும் நெருக்கடியை கொடுப்போம். இந்தப் போட்டியில் நாம் வெற்றி பெறுவோம் என்று நம்பிக்கை எனக்கு உள்ளது.

கொக்குவில் இந்து அணித்தலைவர் இ.வாகீஸ்

## யாழ். இந்துவின் வீரர்கள்



தி.கௌசிகன்
[அணித்தலைவர்], வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், சுழல்பந்து வீச்சாளரும்.



க.அஜித்
[அணிஉபதலைவர்] வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், வேகப்பந்து வீச்சாளரும்.



சே.யாதவன்
வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், வேகப்பந்து வீச்சாளரும்.



தி.கோசிகன்
வலதுகைத் துடுப்பாட்ட வீரர்.



த.சிந்துஜன்
வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், சுழல்பந்து வீச்சாளரும்.



அ.பிரியதர்ஷன்
வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், வேகப்பந்து வீச்சாளரும்.



ந.சுதாகரன்
வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், விக்கெட் காப்பாளரும்.



செ.பவசுதன்
இடதுகைத் துடுப்பாட்ட வீரரும், வேகப்பந்து வீச்சாளரும்.



க.டிலான்
வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், வேகப்பந்து வீச்சாளரும்.



பா.சங்கீதன்
வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், சுழல்பந்து வீச்சாளரும்.



இ.அருண்ராஜ்
வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், சுழல்பந்து வீச்சாளரும்.



சு.பிரசன்னா
வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், வேகப்பந்து வீச்சாளரும்.



இ.நிருஜன்
வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், வேகப்பந்து வீச்சாளரும்.



ஸ்ரீ.மயூலக்ஷன்
வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், வேகப்பந்து வீச்சாளரும்.



சி.செந்தூரன்
வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், சுழல்பந்து வீச்சாளரும்.



த.சிந்துஜன்
வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், வேகப்பந்து வீச்சாளரும்.

## கொக்குவில் இந்துவின் வீரர்கள்



இ.வாகீஸ்
[அணித்தலைவர்], விக்கெட் காப்பாளரும், வலதுகைத் துடுப்பாட்ட வீரரும்.



சி.வல்லவக்குமரன்
[அணிஉபதலைவர்], வலதுகைத் துடுப்பாட்ட வீரரும் இடை நிலை வேகப்பந்து வீச்சாளரும்.



ரா.நிருஜன்
வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், இடை நிலை வேகப்பந்து வீச்சாளரும்.



தி.லக்ஸ்ஷன்
வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், வேகப் பந்துவீச்சாளரும்.



பி.நிதர்ஷன்
இடதுகைத் துடுப்பாட்ட வீரரும், வேகப்பந்து வீச்சாளரும்.



வி.ஜனார்த்தனன்
வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், பதில் விக்கெட் காப்பாளரும்.



கு.நிரோஜன்
வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், சுழல்பந்து வீச்சாளரும்.



சி.நிரோஜன்
வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், வேகப்பந்து வீச்சாளரும்.



இ.நேசன்
வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், சுழல்பந்து வீச்சாளரும்.



த.துவாரகன்
இடதுகைத் துடுப்பாட்ட வீரரும், சுழல்பந்து வீச்சாளரும்.



பா.ரெவிசன்
வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், வேகப்பந்து வீச்சாளரும்.



ச.கோபிகன்
வலதுகைத் துடுப்பாட்ட வீரரும் பந்து வீச்சாளரும்.



ச.ஜனுகுலன்
இடதுகைத் துடுப்பாட்ட வீரரும், வேகப்பந்து வீச்சாளரும்.



சி.உத்தமக்குமரன்
வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், சுழல்பந்து வீச்சாளரும்.



கு.ஜனுதாஸ்
வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், சுழல்பந்து வீச்சாளரும்.



ஸ்ரீ.மயூரன்
வலதுகைத் துடுப்பாட்ட வீரரும், பந்து வீச்சாளரும்.

# வாங்கி விட்டீர்களா ?



தகவல் தொழில் நுட்ப ஆசிரியர்

சி.பிரணவன் எழுதிய

"பொதுத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம்"

OL, AL மாணவர்களுக்கான அரசாங்கப் பாடத்திட்டத்தைத் தழுவி, பல்கலைக்கழக, தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களுக்கும் அரச, தனியார் துறை அலுவலர்களுக்கும் வழிகாட்டும் வகையில் எழுதப்பட்டது

கிடைக்கும் இடம்: ஸ்ரீ சுப்பிரமணியம் புத்தகசாலை, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.



## பணிப் பெண்கள் தேவை

நன்றாக வீட்டு வேலைகள் செய்யக் கூடிய பணிப்பெண்கள் தேவை.

விள.இல.: 3074, மே/பா.உதயன்.

## விற்பனைக்கு

ரைசன்-100 மோட்டார் சைக்கிள் தொடரெண் NPGM xxxx கொண்டது. உடன் விற்பனைக்கு.

தொடர்பு:
இல.60, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 222 3898, 0776917030

(சி/552018)

## தேவை

முகாமையாளர்:
முன் அனுபவம், 3 மொழிகள் தெரிந்தவராக இருத்தல் வேண்டும்.

சிற்றூழியர்:
எமது நிறுவனத்திற்கு அண்மையில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.

நேரில் தொடர்பு:
மூர்த்தி டிஜிட்டல் கலர் லாப்
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(சி/552014)


## பாராட்டி வாழ்த்துகின்றோம்



### திரு. பொ.வரதகுலசிங்கம்

எமது கல்லூரியின் ஆசிரியராகவும் ஆரம்பப் பிரிவு பகுதித்தலைவராகவும் சிறப்புடன் கடமையாற்றிய திரு.பொன்னையா வரதகுலசிங்கம் அவர்கள் யா/புத்தூர் மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையின் கடமை நிறைவேற்று அதிபராக நியமிக்கப்பட்டுள்ளமையையிட்டு பெருமகிழ்வு எய்துகின்றோம். அவரின் எதிர்காலம் மேன்மையுற பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/அச்சுவேலி மத்திய கல்லூரி,
அச்சுவேலி.

(சி/552015)


# இது உங்கள் கனவாகக் கூட இருக்கலாம்..........
# ஆனால், நீங்கள் சிலவற்றிற்காக தயங்குகிறீர்கள்...

சர்வதேச தரமுடைய சான்றிதழா?
ஆங்கில மொழி மூலம் கற்கமுடியுமா?
பரீட்சைகள் கடினமாக இருக்குமா?

**கவலையை விடுங்கள்!**

Trinity இனது பல்கலைக்கழகங்கள் உலகில் எந்த இடத்திலும் உள்ளது
உங்களுக்காக தாய்மொழிமூலமான விசேட விரிவுரைகள்!
பரீட்சைகள் யாவும் எமது நிறுவனத்தினாலேயே நடாத்தப்படும்!

**பெற்றோர்களே! O/L தகமையுடன்! 2 வருடங்களில்!**
**உங்கள் பிள்ளைகள் உங்கள் கண்முன்னேயே பட்டதாரியாகும்**

ஓர் அரிய சந்தர்ப்பம்!

**North Lanka IIT உடன் இணையுங்கள்!**

உழைக்கும் போதே படியுங்கள்! உங்கள் உழைப்பில் படியுங்கள்!
சனி, ஞாயிறுகளில் விரிவுரைகள்! Specially for workers..



Prof.A.Sanmugadas Administrative Advisor

Main Street,
Chankanai.
(+94)060 221 4305
northlankaiit@yahoo.com

New College of Higher Studies
No 95, Ariyakulam Junction,
Jaffna. (+94)021 222 8148
(+94)060 221 4305

North Lanka IIT is your right choice for Degree Education


## ஒன்றுகூடல்

யாழ்.புனித பத்திரிசியார் கல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த ஒன்றுகூடல் நாளை சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கல்லூரி மதுரம் சதுக்கத்தில் இடம் பெறவுள்ளது.

புனித பத்திரிசியார் தினத்தில் வருடம் தோறும் இடம் பெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தென் இந்திய திருச்சபையின் முன்னாள் ஆயர் அருட் கலாநிதி எஸ். ஜெபநேசன் கலந்து கொள்வார். இந்த வைபவத்தில் குருத்துவப் பணியில் பொன் விழாவை நிறைவு செய்த அருட் கலாநிதி எஸ். ஈ.என். குணசீலன், அருட்தந்தை ஏ.பி.ஈ. செல்வராஜா, கலா பூஷணம் வி.ஜே. கொன்ஸ்ரன் ரைன், எம்.டி.தம்பிராஜா ஆகியோர் கௌரவிக்கப்பட உள்ளனர். (202)

## சுகம் வேண்டி திருமுறை பாராயணம்

அகில இலங்கை திருமுறை மன்றம் ஆலயங்கள் தோறும் வெள்ளிக்கிழமைகளில் நடத்தி வரும் பன்னிரு திருமுறைக் கூட்டுவழிபாட்டில் அன்னை துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி சுக நலம் வேண்டி பிரார்த்தித்து வருவதாக அகில இலங்கை திருமுறை மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ண மூர்த்தி தெரிவித்தார். (202)

## தெல்லிப்பழை கோட்ட மட்ட விளையாட்டு போட்டிகள்

தெல்லிப்பழைக் கோட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகள் நாளை காலை 8 மணிக்கு அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாக வுள்ளன என்று தெல்லிப்பழைக் கோட்டக் கல்விப் பணிப்பாளர் ச.கயிலாசநாதன் தெரிவித்துள்ளார். நாளை மறுதினமும் போட்டிகள் இடம்பெற்று இறுதி ஆட்டங்கள் நடைபெறும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (203)

## 9ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் இரத்தினம் புனிதராசா
(செல்வராசா)
சன்றைஸ் ரேடர்ஸ், சாவகச்சேரி)

**தோற்றம்: 02.06.1961**

**மறைவு: 23.03.1999**

திதி: ஷஷ்டி (28.03.2008)

எங்கள் குடும்ப ஒளிவிளக்கு அணைந்து
ஆண்டொன்பதுகள் ஆனதுவோ
அப்பாவைக் காணாது வாடுகின்றோம் இங்கு நாம்
மீண்டும் பிறந்து எம்முடன் வாழ
வரமாட்டீர்களோ அப்பா.

அன்பு மனைவி, மக்கள், தாய், தந்தை, சகோதரர்கள், மாமி, மச்சான்மார், மச்சாள்மார், உற்றார், உறவினர், நண்பர்கள்.

மீசாலை கிழக்கு,
மீசாலை.

(72409)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி உலகபரமேஸ்வரி சிவஞானம்



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி உலகபரமேஸ்வரி சிவஞானம் கனடாவில் நேற்று (27.03.2008) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிரபல வர்த்தகர் டிக்கோயா சிவஞானம் அவர்களின் அன்புத் துணைவியும் காலஞ்சென்றவர்களான நாகராசா- சொர்ணலஷ்மி தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகளும் நாகலஷ்மியின் அன்புச் சகோதரியும் ஜெயலஷ்மி (கனடா), காலஞ்சென்ற இளம்பூரணன் (ஆசிரியர்), சம்பூரணன் (கனடா), சிவபூரணன் (கனடா), மகாபூரணன் (கனடா), தர்மவதி (கொழும்பு), பரிபூரணன் (R.D.D.,யாழ்ப்பாணம்), சுயபூரணன் (சுவிஸ்), சுதர்ஜி (கனடா), ஞானேஸ்வரி (கனடா), பூலோகபூரணன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் மாகோ அருளம்பலம் (கனடா), கிருஸ்ணவேணி (கனடா), புனிதவதி (கனடா), அனுசா (கனடா), காலஞ்சென்ற அம்பிகை குமரன் (அம்பிகைகுமரன் ஸ்ரோர்ஸ்- கொழும்பு), சூரியகுமாரி (யாழ்ப்பாணம்), மஞ்சுளா (சுவிஸ்), ராசலிங்கம் (கனடா), காலஞ்சென்ற கணேஷ் (B.Com.), சிந்தியா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும் திருநாவுக்கரசுவின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 31.03.2008 திங்கட்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*பொற்பதி றோட்,*
*பிள்ளையார் கோயில் மேற்கு வீதி,*
*கொக்குவில் கிழக்கு,*
*கொக்குவில்.*

தகவல்:
சி.பரிபூரணன் (மகன்).
021 222 7027.

(72482)

### திருமதி கிறேஸ் சரஸ்வதி றெஜினோட்

சுண்டுக்குளியைப் பிறப்பிடமாகவும் லண்டனை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கிறேஸ் சரஸ்வதி றெஜினோட் (26.03.2008) புதன்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை- செல்லாச்சி தம்பதியரின் மகளும் காலஞ்சென்றவர்களான முருகேசர் தம்பாபிள்ளை- லிடியா தம்பதியரின் மருமகளும் E.R. தம்பாபிள்ளை றெஜினோட்டின் மனைவியும் காலஞ்சென்ற வணக்கத்துக்குரிய G.J. தம்பாபிள்ளை, அ.த.ஜெயசிங்கம் ஆகியோரின் மைத்துனியும் Dr.G.C.றெஜினோட் (லண்டன்), சேளி தியாகராஜா (லண் டன்), லோகினி குணசிங்கம் (லண்டன்), சந்திரகுமார் (லண் டன்), செல்வி ராஜினி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும் பொன்.தியாகராஜா, குணசிங்கம், வனிதா, ஜெயவதனி ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கம் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:A.T.ஜெயசிங்கம்.

| | |
|---|---|
| Dr.றெஜினோட் | - 0044 02476619006, |
| சேளி தியாகராசா | - 0044 02084824294, |
| லோகினி குணசிங்கம் | - 0044 2082450239, |
| சந்திரகுமார் | - 0044 02083660583. |

(72484)

## சாவகச்சேரி பிரதேசசபை

### கொடிகாமம் மத்தியசந்தை

மரக்கறிச் சந்தை, மீன் சந்தை, துவிச்சக்கர வண்டி பாதுகாப்பு நிலையம் என்பனவற்றை குத்தகைக்கு விடுவதற்கான (01.05.2008 முதல் 31.12.2008 வரை)

# கேள்வி அறிவித்தல்- 2008

1. கேள்விப்பத்திரம் வழங்கும் கடைசித் திகதி: 05.04.2008
2. கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதி: 07.04.2008
3. கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி: 09.04.2008

### கேள்வி அறிவித்தல் அட்டவணை

| இல. | குத்தகை விவரம் | ஆகக்குறைந்த கேள்வித் தொகை (வற்வரி தவிர) | கேள்விப்பணம் (மீளளிக்கப்படக் கூடியது) | கேள்விப்படிவக் கட்டணம் (வற்வரி தவிர) |
|---|---|---|---|---|
| 1. | கொடிகாமம் மத்திய மரக்கறிச் சந்தை (தேங்காய்ச் சந்தை உட்பட) | 1,800,000.00 | 5,000.00 | 500.00 |
| 2. | கொடிகாமம் மீன்சந்தை (கோழிக்கடை உட்பட) | 175,000.00 | 2,000.00 | 200.00 |
| 3. | கொடிகாமம் மத்திய சந்தையிலுள்ள வண்டி, வாகன பாதுகாப்பு நிலையம் (கிழக்கு மேற்கு இருவாயில்கள்) | 200,000.00 | 2,000.00 | 200.00 |

நிபந்தனைகள்:

1. குத்தகைக்கான காலம் 08 மாதங்கள் (01.05.2008 முதல் 31.12.2008 வரை)
2. கேள்வித்தொகை, படிவக்கட்டணம் என்பவற்றுடன் 15% வற்வரியும் சேர்த்து செலுத்துதல் வேண்டும்.
3. வண்டி பாதுகாப்பு நிலையத்தில் துவிச்சக்கரவண்டி - ரூபா 2.00, மோட்டார் சைக்கிள் - ரூபா 5.00, மோட்டார் வாகனம் ரூபா 10.00 என்ற விகிதக்கட்டணம் அறவிடற்பாலது.
4. தெரிவு செய்யப்படும் கேள்விதாரர் ஒருவார காலத்துள் 1/3 பகுதியை முற்பணமாகச் செலுத்துதல் வேண்டும். மிகுதித்தொகையினை 1/5 பகுதிகளாகப் பிரித்து மாதக் கட்டணமாக அடுத்த 10ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துதல் வேண்டும்.
5. கேள்விப் படிவத்தின் ஒரு பிரதியை செயலாளர், சாவகச்சேரி பிரதேசசபை, கொடிகாமம் என்ற விலாசத்திற்கும் மறு பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், சிவன் பண்ணை வீதி,யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு நேரடியாகவோ, தபால் மூலமோ அனுப்பி வைத்தல் வேண்டும்.
6. கேள்விகளை தகுந்த காரணங்களால் ஏற்கவும் நிராகரிக்கவும் பூரண அதிகாரம் செயலாளருக்கு உண்டு.
7. மேலதிக விவரங்களை பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

சாவகச்சேரி பிரதேசசபை,
கொடிகாமம்.
25.03.2008

வேலுப்பிள்ளை சிவராஜலிங்கம்,
செயலாளர்.

(சி/552016)

# இவ்வாண்டுக்குரிய சமுர்த்தி முத்திரைகள் வந்து சேராமையால் ஜனவரிக்கான பொருள்கள் டிசெம்பர் புள்ளிக்கு வழங்கப்பட்டன

## ஒரு மாதத்துக்குரிய நிதி கிடைக்காததால் இந்த மாற்று ஏற்பாடு என்கிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணம்,மார்ச்28

கடந்த டிசெம்பர் மாத்திற்கான சமுர்த்தி முத்திரைக்குரிய நிதி யாழ்.மாவட்டத்திற்கும் கிடைக்கவில்லை. எனவே ஜனவரி மாதத்தில் 2008இற்குரிய முத்திரைகள் கிடைக்காத காரணத்தால் மக்களின் நன்மை கருதி டிசெம்பர் மாதப் புள்ளியை வெட்டி ஜனவரி மாதத்திற்குரிய பொருள்கள் வழங்கப்பட்டன என யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சமுர்த்தி ஆணையாளர் நாயகத் தினால் முத்திரைகள் வழங்கப்படுவதுடன், முத்திரைப் பெறுமதிக்குரிய நிதியும் சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டு வருகின்றது. டிசெம்பர் 2007 இற்திற்குரிய சமுர்த்தி முத்திரைப் பெறுமதிக்குரிய நிதி இலங்கையிலுள்ள எல்லா மாவட்டங்களிலும் சமுர்த்தி ஆணையாளர் நாயகத் திணைக்களத்தினால் வழங்கப்படாத காரணத்தினால், யாழ்.மாவட் டத்திற்கும் இந்த டிசெம்பர் மாத முத்திரைப் பெறுமதிக்குரிய நிதி கிடைக்கப் பெறவில்லை. எனவே ஜனவரி மாத்தில் 2008 இற்குரிய முத்திரைகள் கிடைக்காத காரணத்தால் மக்கள் நன்மை கருதி டிசெம்பர் மாதப் புள்ளியை வெட்டி ஜனவரி மாதத்திற்குரிய பொருள்கள் வழங்கப்பட்டன. அந்த வகையில் ஜனவரி மாதம் வழங்கப்பட்ட பொருள்களுக்குரிய நிதி, ஜனவரி மாதம் சமுர்த்தி ஆணையாளர் நாயகத்திணைக்களத்தால் வழங்கப்பட்ட நிதியிலிருந்து கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் பெப்ரவரி மாதத்தில் சமுர்த்தி முத்திரைகள் கிடைக்கப் பெற்ற காரணத்தால், பெப்ரவரி மாதத்திற்குரிய நிவாரணத்தினை வழங்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது. இதன் காரணமாக ஜனவரி மாதத்திற்குரிய சமுர்த்தி முத்திரைப் புள்ளிகள் வெட்டப்பட்டு, அத்து டன் பெப்ரவரி மாதத்திற்குரிய புள்ளிகளும் வெட்டப்பட்டு பெப்ரவரி மாதத்திற்குரிய நிவாரணம் ம: டும் வழங்கப்பட்டது. சில பிரதேச செய...கப் பிரிவுகளில் இந்த ஜனவரி மாதத்திற்குரிய புள்ளிகள் வெட்டப்படாமல் சமுர்த்தி முத்திரை அட்டைகளுடன் விடப்பட்டுள்ளன.

ஏனைய மாவட்டங்களில் சமுர்த்தி முத்திரைகளில் உள்ள பொருள் முத்திரைக்குரிய பெறுமதிக்கு ப.நோ.கூ.சங்கங்கள் ஊடாக உணவுப் பொருள்களும், பண முத்திரைக்குரிய பெறுமதிக்கு சமுர்த்தி வங்கிகள் ஊடாக நிதியும் வழங்கப்பட்டு வருகிறது.

யாழ்.மாவட்டத்திலும் இதே நடை முறை 2005 ஜூலையிலிருந்து பின்பற்றப்பட்டு வந்தது. ஆனால் 11.08.2006 இன் பின்னர் இந்த சமுர்த்தி முத்திரைப் பெறுமதியின் பொருள் முத்திரை, பணமுத்திரை ஆகிய வற்றிற்கான மொத்தப் பெறுமதிக்குரிய நிதிக்கு அரச அதிபர் ஊடாகக் களஞ்சியங்களிலிருந்து வழங்கப்படும் உணவுப் பொருள்கள் ப.நோ.கூ.சங்கங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (வெளிச் சந்தையில் பொருள்களின் விலை உயர்வாக உள்ள காரணத்தால் இந்த நடைமுறை பின்பற்றப்பட்டு வருகிறது). - என்றுள்ளது. (202)

# கிணற்றில் விழுந்த மகனைக் காப்பாற்ற குதித்த தந்தை பரிதாபகரமாக மரணம்

## மகன் உயிருடன் மீட்கப்பட்டார்

யாழ்ப்பாணம், மார்ச்28


கிணற்றில் விழுந்த தனது மகனைக் காப்பாற்றுவதற்காக அக்கிணற்றில் குதித்த தந்தை நீரில் மூழ்கி பரிதாபகரமாக மரணமானார். எனினும் அதிர்ஷ்டவசமாகப் பிள்ளை உயிருடன் காப்பாற்றப்பட்டது.

இப்பரிதாப சம்பவம் கடந்த 24ஆம் திகதி காரைநகர், அறுகம் புலம் என்னும் இடத்தில் இடம்பெற்றுள் ளது.

பொன்னையா சந்திரராசா (வயது 53) என்பவர் கிணற் றில் விழுந்த தனது 7 வயது மகனைக் காப்பாற்றுவதற்காக கிணற்றில் குதித்துள்ளார். குதித்தவர் நீரின் அடியில் சிக்கிக் கொண்டார். ஆனால் பிள்ளை அயலவரின் உதவியுடன் காப்பாற்றப்பட்டது. தந்தை கிணற்றுக்குள் குதித்ததை ஏனையவர்கள் அறியவில்லை. அப்பிள்ளை அப்பா கிணற்றுக்குள் என்று கூறியதும் கிணற்றில் அவரைத் தேடியபோது அவர் நீரின் அடியில் பாறையில் சிக்குண்டிருந்து சடலமாக மீட்கப் பட்டாரென்று தெரிவிக் கப்படுகிறது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற பிரேத பரிசோதனையின் பின் இவரது சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

(202-100)




யாழ்.போதனா வைத்தியசாலையில் நிலவும் குருதித் தட்டுப்பாட்டைக் கருத்தில் கொண்டு கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் ஒன்றியம் அண்மையில் இரத்ததான நிகழ்வொன்றை நடத்தியது. இதில் மாணவர்களும் விரிவுரையாளர்களுமாக 58 பேர் குருதிக்கொடை வழங்கினர். இரத்ததான நிகழ்வில் எடுக்கப்பட்ட படம் இது.

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

### கடலுணவுகளைப் பதப்படுத்தும் மூலவள நிலையம் பொன்னாலையில்

சுழிபுரம், மார்ச் 28

வலி.மேற்கு, வலி.தென் மேற்கு, காரைநகர் ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த கடற்றொழி லாளர்களின் நன்மையைக் கருதி கடலுணவுகளைப் பதப்படுத்தி சந்தைப் படுத்தும் மூலவள நிலையம் பொன்னாலையில் அமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த மூலவள நிலையம் யாழ்.அரசாங்க அதிபர், கடற்றொழில் நீரியல் வளத்துறை உதவிப் பணிப்பாளர் ஆகியோரின் நடவடிக்கையால் நிறுவப்பட்டு வருகின்றது.

கட்டட வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. விரைவாக மூலவள நிலையம் செயற்படும் என்ற நம்பிக் கையை கடற்றொழில் நீரியல் வளத் துறைத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

(202-28)

### சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் மேசன் பயிற்சிநெறி

யாழ்ப்பாணம்,மார்ச் 28

உலக வங்கியின் வடக்கு, கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத் திட்டத்தின் அனுசரணையுடன் தொழிற்றுறைத் திணைக்களம் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் மேசன் பயிற்சிநெறியை நடத்தவுள்ளது

இப்பயிற்சிநெறியில் 25 பயனாளிகள் இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்

பயிற்சிநெறியில் இணையவிரும்பும் தரம் 8 இற்குமேல் கல்விகற்ற,18-45 வயதுக்குட்பட்டவர்கள் நாளை சனிக்கிழ மைக்கு முன்னர் வி...ணப்பங்களைச் சாவகச்சேரி பிரதேசசெ...கத்தில் ஒப்ப டைக்குமாறு மாவட்ட அலுவலர் திருமதி பொ.பெனராஜ் கேட்டுள்ளார்.

(207)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 28

சாவகச்சேரி பஞ்சகிருபாலய மாணவிகளின் நாட்டியாஞ்சலி நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி சிவன் கோவில் வீதியில் உள்ள தென்மராட்சி கலைமன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தென்மராட்சி கலைமன்ற ஆதரவுடன் திருமதி தர்சினி பீதாம்பரனின் நெறியாள்கையில் நாட்டியாஞ்சலி நடைபெறும்.

க.மோகனராஜலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு முன்னாள் யாழ்.செயலக திட்டமிடல் பணிப்பாளர் க.கேதீஸ்வரன் முதன்மை விருந்தின ராகக் கலந்து கொள்வார். (202-207)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச் 28

தென்மராட்சி பிரதேசத்தில் உலக வங்கியின் அனுசரணையுடன் ஐந்து கிராம அலுவலர் பிரிவுகளில் இவ்வருடம் மேற்கொள்ளப்படவுள்ள இரண்டாவது தொகுதி மீள் எழுச்சித் திட்டத்தின் அறிமுகவிழா நாளை சனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு தென்மராட்சி பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறுமென பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் அறிவித்துள்ளார்-

கோயிற்குடியிருப்பு, மீசாலை வடக்கு (தெருவாரம்), கைதடிவடக்கு, கொடிகாமம் தெற்கு (தவசிகுளம்), கைதடி - நாவற்குழி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஏற்கனவே பிரதேசத்தின் மண்டுவில், கைதடி கிழக்கு, வெள்ளாம்போக்கட்டி, கரம்பைக்குறிச்சி, குடமியன் ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(202-207)

யாழ்ப்பாணம்,மார்ச் 28

தெல்லிப்பழை பிரதேச செயலகத்தில் மீள் எழுச்சித் திட்ட அறிமுகவிழா இன்று பிற்பகல் 2 மணிக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (202)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச் 28

உலக நீர்தினமான இன்று வெள்ளிக்கிழமை அதனையொட்டிய விழிப்புணர்வுக் கருத்தரங்கு நல்லூர் பிரதேச செயலர் பணிமனையில் முற்பகல் 11.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கில் நல்லூர் பிரதி பிரதேச செயலர் நீர்வழங்கு வடிகால்சபை அதிகாரிகள் உட்பட பலர் கலந்து கொள்வார்கள். (202-111)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச் 28

உடுவில் மகளிர் கல்லூரியில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு 'இதோ! நான் உன் அருகில்... என்னும் உயிர்ப்புப் பஜனை நிகழ்வு நடைபெறவுள்ளது. (202)

* * *

யாழ்ப்பாணம்,மார்ச் 28

வடமராட்சி தெற்கு, மேற்கு பிரதேச செயலக பிரதேச மட்ட சர்வதேச மகளிர் தின விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிரதேச செயலாளர் சி.சத்தியசீலன் தலை மையில் நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய திருமண மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவத் துறை தலைவர் திருமதி தேவரஞ்சினி சிவாஸ்கரன் கலந்து கொள்வார். 'குடும்பத்தின் அந்தஸ்தை பெரிதும் தக்க வைத்துக் கொள்வது பெண்களே' எனும் விவாத அரங்கு உள்ளிட்ட பல கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (202)

### விழிப்புலனற்ற மாணவர்களுக்கு கொடுப்பனவு

யாழ்ப்பாணம்,மார்ச் 28

ஜி.சீ.ஈ. உயர்தர வகுப்புகளில் கற்கும் விழிப்புலனற்ற தென்மராட்சிப் பிரதேச மாணவர்களுக்கு சமூக சேவைகள் திணைக்களத்தினால் மாதாந்தம் 750 ரூபா கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

குறிப்பிட்ட மாணவர்கள் பிரதேச செயலக சமூக சேவைகள் பிரிவில் தமது பெயர்களைப் பதிவு செய்யுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் கேட்டுள்ளார்.

(202-207)

### விவசாயக் குழுக்கூட்டம்

வலி.தென் மேற்கு ,மார்ச் 28

வலி.தென் மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச விவசாயக் குழுக்கூட்டமும், ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமும் எதிர் வரும் 3 ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

விவ்சாயக்குழுக்கூட்டம் முற்பகல் 10 மணிக்கும் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம் முற்பகல் 11 மணிக்கும் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலர் திருமதி ரூபினி வரதலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

(202-135)

### தென்மராட்சிப் பிரதேச சமூக சேவை நிறுவனங்களை பதியுமாறு அறிவுறுத்து

யாழ்ப்பாணம் ,மார்ச் 28

தென்மராட்சிப் பிரதேசத்தில் இயங்கும் வலிந்து உதவும் சமூக சேவை நிறுவனங்களை உடனடியாகப் பதிவு செய்யுமாறு பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் கேட்டுள்ளார்.

பிரதேச செயலகத்தில் ஏற்கனவே பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் தமது பதிவினைப் புதுப்பிக்குமாறும் - எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் பதிவினை மேற்கொள்ளாத நிறுவனங்களின் பதிவுகள் நீக்கப்படுமெனவும் அவர் மேலும் அறிவித்துள்ளார். (202-207)

### விழிப்புலனற்றோர் சங்கம் 20 அங்கத்தவர்களை ஓய்வூதியத்தில்இணைத்துள்ளது

யாழ்ப்பாணம்,மார்ச்28

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கம் தனது அங்கத்தவர்கள் 20 பேரை சங்க நிதியத்தின் மூலம் முதற்கட்டமாக சமூக பாதுகாப்பு ஓய்வூதியத் திட்டத்தில் இணைத் துள்ளது.

சுயதொழில் புரிபவர்களுக்கென அரசினால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள இந்த ஓய்வூதியத்திட்டத்தில் சுயதொழில் மேற்கொள்ளும் விழிப்புலனற்றவர்களை இணைக்கும் செயற்பாட்டை மேற்படி சங்கம் முன்னெடுத்து வருகின்றது.

இதன் முதற்கட்டமாக 20 பேர் இணைத்து வைக்கப்பட்டுள்ளனர். மேலும் பலரை இத்திட்டத்தில் இணைத்துக் கொள்வதற்கும் - பல்வேறு நலன்புரித் திட்டங்களைத் தனது அங்கத்தவர்களுக்கு மேற்கொள்ளவுள்ளதாகவும் சங்கத்தின் செயலாளர் தெரிவித்தார்.

(202)

### வறிய மாணவர்களுக்கு சொன்ட் நிறுவனம் உதவி

வலி.தென்மேற்கு,மார்ச்28

வலி.தென்மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலக பிரிவில் வறிய குடும்பங்களைச் சேர்ந்த 40 மாணவர்களுக்கு சொன்ட் நிறுவனம் பாடசாலை உபகரணங்களை வழங்கவுள்ளது.

இதற்கான பெயர்ப்பட்டியல் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(202-135)

### 10 பேருக்கு வழ்வாதார உதவிக் கொடுப்பனவு

வலி.தென் மேற்கு ,மார்ச்28

மானிப்பாய் சமுர்த்தி வங்கிச் சங்கம் சமுர்த்தி பயனாளிகள் 10 பேருக்கு வழ்வாதார உதவிக் கொடுப்பனவை வழங்கியுள்ளது.

சமுர்த்தி வங்கி முகாமையாளர் கு.சசிகரன் தலைமையில் அண்மையில் நடைபெற்ற உதவிக் கொடுப்பனவு வழங்கும் நிகழ்வில் சண்டிலிப்பாய் பிரதேச உதவி செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயகம் கலந்து கொண்டார்.

"சிப் தொற" புலமைப்பரிசில் பெற்ற 9 மாணவர்களுக்கான கொடுப்பனவும் இந் நிகழ்வில் வழங்கப்பட்டது.

(202-135)



வசாவிளானில் புதிதாக அமைக்கப் பட்ட முன்பள்ளிக் கட்டடத்தின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது.

நிகழ்வில் நிக்கொட் பிரதித் திட்ட முகாமையாளர் என்.ஆர்.எஸ்.சிவரூபன் நிலையத்தின் பெயர்ப் பலகையைத் திரைநீக்கம் செய்வதை முதலாவது படத் தில் காணலாம்.

சேவாலங்கா திட்ட முகாமையாளர் ஜி.சபேசனும் அருகில் காணப்படுகின் றார்.

முன்பள்ளி கட்டடத்தை சேவாலங்கா நிறுவன மாவட்டப் பணிப்பாளர் வி. கேசவன், தெல்லிப்பழை பிரதேச செயலர் எஸ்.முரளி தரன் ஆகியோர் இணைந்து திறந்து வைப்பதை இரண்டாவது படத் தில் காணலாம்.

(302)

## செயலமர்வுகள் பிற்போடப்பட்டன

யாழ்ப்பாணம், மார்ச்28

தீவகக் கல்வி வலயத்தால் நாளை சனிக்கிழமை கொட்டடி நமசிவாயம் வித்தியாலயத்தில் நடத்தப்படவிருந்த செயலமர்வுகள் எதிர்வரும் 5ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளன என வலயக் கல்விப் பணிப்பாளர் ஏ.ராஜேந்திரன் தெரிவித்தார்.

தரம் 11இற்கான விஞ்ஞான பாட கலைத்திட்ட அமுலாக்கல், தரம் 3இற்கான புதிய கல்விச் சீர்திருத்த பாடத்திட்டம் ஆகிய செய லமர்வுகளே பிற்போடப்பட்டுள்ளன. (202)

கர்த்தருக்குள் நித்திரையடைந்த
**வண.டி.ஆர். அம்பலவாணர் அவர்களின்**
வாழ்வுக்கும் இறைபணிக்கும் நன்றி நவிலும் வழிபாடு



23.03.2008 ஈஸ்டர் தினத்தன்று கர்த்த ருக்குள் நித்திரையடைந்த வண.டி.ஆர். அம்பலவாணர் (இளைப்பாறிய சிரேஸ்ட ஊழியர் JDCSI, சிரேஷ்ட விரிவுரையா ளர், இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல் லூரி, மருதனார்மடம்) அவர்களின் வாழ் வுக்கும் 58 வருட இறைபணிக்கும் நன்றி நவிலும் வழிபாடு நாளை(29.03.2008) சனிக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு மானிப் பாய், அமெரிக்கன் இலங்கை மிசன் தேவாலயத்தில் நடைபெறும். இந்த வழிபாட்டில் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

குடும்பத்தினர் சார்பாக,
வைத்தியகலாநிதி C. அம்பலவாணர்,
திருமதி அதிசயம் முத்தையா,
அருள்திரு D.S.அம்பலவாணர்.

மிசன் இல்லம்,
மானிப்பாய் கிறீன் வைத்தியசாலை,
மானிப்பாய். (72462)

## புலமைப்பரிசில் அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், மார்ச்28

அரியாலை அபிவிருத்திச் சபை ஆரம் பித்துள்ள கல்விப்புலச் சேவை புலமைப் பரிசில் திட்டத்தின் அங்குரார்ப்பண வைப வம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு அரியாலை, கண்டிவீதியில் உள்ள சங்கத் தின் அலுவலகத்தில் நடைபெற வுள்ளது.

இந்நிகழ்விற்குப் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகமும் சிறப்பு விருந்தினராக வைத்திய கலாநிதி ம.குணரட்ணமும் கலந்து கொள்வர். (202)

## அறுவடையில் சிதறிய மணிகள் மீண்டும் முளைத்தன

நவாலி, மார்ச்28

ஆனைக்கோட்டை, நவாலி மற்றும் ஏனைய பகுதிகளிலுள்ள வயல்களில் நெல் அறுவடையின் போது கொட்டுண்டு சித றிய நெல் மணிகள் முளைத்து பெரிய பயிர் களாக வளர்ந்துள்ளன.

இதனைக் கண்டு பல விவசாயிகள் தாங்கள் இம்முறை சிறுபோக நெற்செய்கை மேற்கொண்டிருக்கலாமென கருத்துத் தெரி விக்கின்றனர். (202-100)

## மாணவர்களுக்கு பாதணிகள் அன்பளிப்பு

யாழ்ப்பாணம், மார்ச்28

சாவகச்சேரிலயன்ஸ் கழகத்தினர் கைதடி கலைவாணி வித்தி யாலய மாணவர்க ளுக்கு பாதணிகளை கடந்த செவ்வாய்க் கிழமை வழங்கினர்.

வித்தியாலய அதிபர் ப.செல்லத் துரை தலைமையில் நடைபெற்ற நிகழ் வில் கழகத் தலை வர் லயன் இ.ஜெய பாலன், மாவட்டத் தலைவர் (வீதி போக் குவரத்து) லயன் கா.சற்குணதேவன் ஆகியோர் கலந்து கொண்டு வித்தியால யத்தின் அனைத்து மாணவர் களுக்கும் பாதணிகள் வழங்கி யதாக கழகச் செயலா ளர் லயன் செ.சுப் பிரமணியம் தெரி வித்தார்.(202-207)

## ஆடு வளர்ப்பு பயிற்சி வகுப்பு

சேவாலங்கா நிறு வனம் ஆடு வளர்ப்பு பற்றிய இருநாள் பயிற்சி வகுப்பை உயரப்புலம் மகளிர் கிராம அபிவிருத்திச் சங்க கட்டடத்தில் நடத்தியது.

20 பயனாளிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்களுக்கு ஆடு களும் வழங்கப்பட வுள்ளதாக பிரதேச செயலாக வட்டாரங் கள் தெரிவித்தன. (202-135)

## முதலாம் ஆண்டு நினைவலைகள்..

### திருமதி.லியோணா யூலியஸ்ராணி பசில் ராஜ்குமார்

ஆசிரியை: யா/ புற்றளை மகா வித்தியாலயம்
யா/ வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, நெல்லியடி



குடும்பத்தில் ஒளிதரும் நல்விளக்காய்
இறை வழிகாட்டும் நல் மறையாசிரியையாய்
வாழ்ந்து
எமக்கெல்லாம் வழிகாட்டியாய் அமைந்த
எம் அன்புச் செல்வமே! செல்வமகளே........
ஓராண்டென்ன ஒரு யுகம் சென்றாலும்
மறப்போமா உங்களை............

கணவன் - பசில் ராஜ்குமார்
மகன் - பசில் பியன்ரோ
தாய்
சகோதரன் - ஜோசப் கொன்விக்ரர்
மற்றும் குடும்பத்தினர்

சென்.தோமஸ் லேன் (சந்தி)
சென்.அன்ரனீஸ்லேன்
பருத்தித்துறை

29.03.2008 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் வழிபாட்டு நிகழ்விலும், மதிய போசனத்திலும் தொடர்ந்து பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெறும் திருமதி.யூலியஸ்ராணி ஞாபகார்த்த விளையாட்டுத் திடல் அங்குரார்ப்பன வைபவத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு நண்பர்கள், உறவினர்களை அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

பிறப்பு 22 ★ 04 ★ 1933



இறப்பு 27 ★ 02 ★ 2008

### திருமதி கந்தையா பரமேஸ்வரி

27.02.2008 அன்று காலமான எங்கள் தாய் திருமதி கந்தையா பரமேஸ்வரி அவர்களின் சபிண்டீகரண நிகழ்வு இன்று (28.03.2008) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வரணி வடக்கு,
வரணி. (72470)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## 11ஆவது ஆண்டு நினைவலைகள்

தோற்றம் 14 . 02 . 1936



மறைவு 23 . 02 . 1997

### அமரர் முத்து நடராஜா

தெய்வமே!
ஆண்டுகள் பதினொன்று சென்றும்- உம்
நினைவுகள் எம் நெஞ்சில் கனத்து நிற்கிறது
எம்மைப் பெற்று சீர்காண வைத்த நீர்
அதைக் காண நீங்கள் இல்லையே
உமது ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விநாயகர் பாடசாலை அருகில்,
வல்வெட்டி, வல்வெட்டித்துறை.

உங்கள் மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(72458)

## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 . 08 . 1925



உதிர்வு 10 . 04 . 2007

### திருமதி இராமநாதன் தங்கரத்தினம்

திதி: 28.03.2008

அன்பின் பிறப்பிடமே பாசத்தின் உறைவிடமே- அம்மா
ஓராண்டு என்ன ஓராயிரம் ஆண்டு சென்றாலும்
உம் நினைவு எம்மை விட்டகலாது.

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (72468)

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

# சோளப் பயிர்ச்செய்கையை விருத்தி செய்தால் கால்நடைகளுக்கான தீவனங்களுக்கு யாழ்.மக்கள் தென்னிலங்கையை நம்பியிருக்க வேண்டியதில்லை

## சந்தை வாய்ப்புகளும் உள்ளது என்கிறார் யாழ்.பிரதி விவசாயப் பணிப்பாளர் சிவகுமார்

"குடாநாட்டில் சோளப் பயிர்ச்செய்கையை ஊக்குவிப்பதன் மூலம் - விரிவான முறையில் பயிர்ச்செய்கையில் விவசாயிகள் ஈடுபடுவார்களாயின் தென் இலங்கையில் இருந்து கால்நடை மற்றும் கோழித் தீவனங்களை உயர்ந்த விலையில் இங்கு இறக்குமதி செய்யும் அவசியம் ஏற்படாது'' என்று யாழ்ப்பாணப் பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் உதயனுக்குத் தெரிவித்தார்.



சோளச் செய்கையை அதிகாரிகள் பார்வையிடுகின்றனர்.

குடாநாட்டில் சோளச் செய்கையை ஊக்குவிப்பதால் கிடைக்கக் கூடிய நன்மைகள் தொடர்பாக அவர் வழங்கிய செவ்வியில் மேலும் தெரிவித்ததாவது:-

போதுமான அளவில் சோளம் இங்கு கிடைக்குமாக இருந்தால் அல்லது பயிரிட ஆர்வம் காணப்பட்டால் - இறக்குமதி செய்யப்படும் கால்நடை மற்றும் கோழித் தீவனங்களுக்குச் செலவாகும் கப்பல் கட்டணம் மட்டும் சோளத்தை பயிரிடுவதற்கும், கால்நடை, கோழித் தீவனத்தை உற்பத்தி செய்வதற்கும் போதுமானதாகும்.

### சோளம் சிறந்த புரத உணவு

பால், முட்டை, இறைச்சி என்பவற்றால் கிடைக்கும் விலங்குப் புரதத்தையும்,

### களமும் புலமும்

சோளத்தில் இருந்து நேரடி நுகர்வின் மூலம் தாவரப் புரதத்தையும் ஒரேநேரத்தில் பெற்றுக் கொள்ளமுடியும்.

சோளத்தில் லைசின் (LISEEN) என்ற புரதம் காணப்படுகின்றது. இதை நேரடியாக நுகர்வதிலும் பார்க்க சோளத்தை விலங்குணவாக்கி விலங்குப் புரதத்தை நுகர்வதே சிறந்தது.

ஆபிரிக்க நாடுகள் சோளத்தை நேரடியான உணவாகக் கொள்கின்றன. விருத்தியடைந்த அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆர்ஜன்ரினா மற்றும் ஐரோப்பிய நாடுகள் விலங்குணவாகப் பாவித்து மிருக புரதத்தைப் பெற்றுக் கொள்கின்றன. 'லைசின்' புரதத்தைத் தொடர்ச்சியாக நேரடியாக சாப்பிடுவது சிறப்பானதல்ல.

குடாநாட்டில் தற்பொழுது வருடத்தில் 120 மெற்றிக்தொன் சோளம் உற்பத்தி செய்யப்படுகிறது. மாதத்தில் 10மெற்றிக் தொன்னே உற்பத்தியாகின்றது. இது 100 தொன்னாக (மாதத்திற்கு) அதிகரிக்கும் பொழுதே குடாநாட்டு சோளச்செய்கை வெற்றியடைந்துள்ளதாகக் கருதக்கூடியதாக இருக்கும். சந்தைவாய்ப்புக்கான உத்தரவாதம் பெறப்பட்டுள்ளதால் விவசாயிகள் தயக்கமின்றி இந்தப் பயிர்ச்செய்கையில் ஈடுபடமுடியும்.

கால்நடைத் தீவன உற்பத்தியில் ஈடுபட்டிருக்கும் 'யாழ்கோ' நிறுவனத்தினர் சோளத்தை கிலோ 64 ரூபாவாக கொள்வனவு செய்ய ஆயத்தமாக உள்ளனர். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வழமையான சோள இனங்களைத் தவிர ''பொப்கோர்ன்'' என்னும் புதிய இனமும் இங்கு அறிமுகப்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. சோள உற்பத்தியில் யு.என்.டி.பி. மற்றும் உலக உணவு நிறுவனம் ஆகிய உலக நிறுவனங்களின் அனுசரணை கிடைத்துள்ளது.

உள்ளூர் நிறுவனங்களான ''உலக தரிசனம்''(WORLD VISION) போன்ற நிறுவனங்கள் கூடுதல் அக்கறை காட்டி வருகின்றன. அரச அதிபரும் விதைகள் மற்றும் உரம் போன்றவற்றை உரிய காலத்தில் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளார்.

அத்துடன் அரசாங்க அதிபரோடு ஏனைய அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், அரச நிறுவனப் பிரதிநிதிகள் சோள வயல் விழாக்களில் கலந்துகொண்டு கருத்துகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றனர். விவசாயிகளும் இந்த விழாக்களில் தமது அனுபவங்களைப் பகிர்ந்து வருவது ஆரோக்கியமானதாகும்.

முன்மாதிரி சோளப் பயிர்ச்செய்கை தொடர்பாகக் கண்டறிதல் மூலமான கலந்துரையாடல்களும் காட்சிப்படுத்தல் மூலமான விளக்கங்களும் இடம்பெற்று வருகின்றன.

### சந்தைப்படுத்தல்

தற்பொழுது தானியமாகவும் பொத்திகளாகவும் விற்பனை செய்யும் நடைமுறை வழமையில் உள்ளது. வியாபாரிகளிடம் பொத்திகளை விற்று சந்தைப்படுத்துவதன் மூலம் அதிக லாபத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

தற்பொழுது பொத்திகள் சந்தைகள் மற்றும் கடைகளில் விற்பனை செய்யப்படுகின்றன. அவித்தும் சில இடங்களில் விற்பனை செய்யப்படுகின்றது. அதிகம் முற்றாத பொத்திகளே அவித்து சாப்பிடு வதற்கு சுவையானதாகும். இதைவிட பொத்திகளைப் பச்சையாக உண்ணும் பழக்கத்தை அறிமுகப்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்களின் இடைவேளை உணவாக இதனை அறிமுகப்படுத்தலாம். விலையை மட்டுப்படுத்த பொத்திகளை வெட்டி விற்பனை செய்வது பொருத்தமாக இருக்குமென்று கருதப்படுகின்றது.

### பயிரிடுதல் முறை

பயிர்ச்செய்கை ஆரம்பிக்க முன் நிலத்தைப் பொருத்தமான முறையில் பண்படுத்துவதுடன் அடிக்கட்டு மற்றும் மேற்கட்டு பசளைகளை உரிய நேரத்தில் இடவேண்டும். இதுமிக அவசியமானதாகும். இல்லாவிட்டால் விளைச்சலைப் பாதிக்கும்.

தெரிவு செய்யப்பட்டதும், சிபார்சு செய்யப்பட்டதுமான விதைகளை நடுகைக்கு உபயோகப்படுத்தவேண்டும்.

நடுகையின்போது 2X1 அடி இடைவெளியில் நாட்டவேண்டும். ஒரு நிலையத்தில் இரண்டு நாற்றுக்கள் நடவேண்டுமாயின் 2X2 அடி இடைவெளியில் நாற்று நிரல்கள் அமைக்கப்படவேண்டும்.

ஏனைய பயிர்களிடையே ஊடு பயிராகவும் பயிரிடலாம். இது வருடத்தில் தொடர்ச்சியாக வருமானம் பெறுவதற்கான வழிமுறையாகும்.

தற்போதைய குடாநாட்டு சூழ்நிலை சோளச் செய்கைக்கு சாதகமாக உள்ளதெனலாம் உணவுப் பாதுகாப்பை மேம்படுத்த திட்டமிட்ட பயிர்ச்செய்கையை மேற்கொள்ள வேண்டும்.

சோளத்தின் பெறுமான அதிகரிப்பை மேம்படுத்தும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. அதற்கான செயற்றிட்டங்கள் வயல் விழாக்களில் காட்சிப்படுத்தி விளக்கங்களும் தரப்பட்டுள்ளன.

### பெறுமான அதிகரிப்பு

பெறுமான அதிகரித்தல் என்பது,

* சோளத்தின் உணவைப் பெறுமான அறிதலும் பரவல்படுத்தலும்
* சோளம் அரிசி தயாரித்தல்
* சோளப் பொரி தயார் செய்தல்
* சோளத்தில் சோறு ஆக்குதல்
* சுண்டல் செய்தல்
* சத்துமா - போசாக்கு மா தயாரித்தல்
* பகோடா தயாரித்தல்
* சோளம் மாவில் இருந்து ஏனைய சிற்றுண்டிகள் செய்தல்
* முறுக்குத் தயாரித்தல்
* சோளம் மாவில் இருந்து பிஸ்கட் செய்தல்
* சோளம் மாவில் தோசை சுடுதல்

இவை பெறுமான அதிகரிப்பிற்கும் வருமான அதிகரிப்பிற்குமான வழி முறையாகும்.

காலபோக செய்கைகளில் அறுவடை முடிவடைந்ததும் வயல் நிலங்களிலும் தோட்ட நிலங்களிலும் சிறு தானியங்கள் மற்றும் உப உணவுப் பொருள்களை பயிரிடுவதன் மூலம் உணவுப் பாதுகாப் பை பேண முடியும் என்றார் அவர்.

- சந்தித்தவர் -
கை. பேரின்பநாயகம்




அராலி மத்தி விவசாயிகள் சம்மேளனப் பிரிவிலுள்ள அராலி பெரியகுளம் நியாப் II திட்டத்தின்கீழ் புனரமைப்புச் செய்யப்பட்டு அண்மையில் திறந்துவைக்கப்பட்டது.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் பெயர்க்கல்லை திரைநீக்கம் செய்து வைப்பதை முதலாவது படத்தில் காணலாம்.

உறுதிப்பத்திரத்தை அரச அதிபர் அராலி மத்தி விவசாயிகள் சம்மேளன தலைவரிடம் வழங்குவதையும் அருகில் யாழ்.கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளர் எம்.பற்றிக் டிறஞ்சன், நியாப் திட்ட பொறியியலாளர் மற்றும் கமநல அபிவிருத்தித் திணைக்கள பொறியியலாளர் ஆகியோர் நிற்பதையும் இரண்டாவது படத்தில் காணலாம். *(படங்கள்: வலி.தென்மேற்குச் செய்தியாளர்)*

# நற்சிந்தனைகளை மனதிற்கொண்டு உய்தி பெறுவோம்

### ஞானக்கதிர்



*அஞ்செழுத்துப் பொருளான இறைவன் ஒருபுறம் ஊனநடனம் ஆடுகின்றார். இன்னொருபுறம் ஞான நடனம் செய்கின்றார். ஊன நடனத்தால் மலக் கழிப்பு பீடித்த உயிர்த்திரளுக்கு உடல்களைக் கொடுத்து உலகில் உழலப் பண்ணுவித்துப் பக்கு வப்படுத்துகிறார். ஞான நடனத்தால் பக்குவப்பட்ட உயிர்களை உலகமாயையினின்று பிரித்தெடுத்து சிவசம்பந்தமுறச் செய்கின்றார். இந்த ஞான நடனத்தின் ஓர் அழகிய ஆடல் அவர் குரு வடிவாகக் கோலங்கொண்டு வருதலே. இவ்வாறான குருமூர்த்தங்கள் அவ்வப்போது நாட்டவர் காண நடமாடுகின்றன. அவ்வாறு அண்மைக் காலத்தில் நமது மண்ணில் மலரடி வைத்துத் திரிந்த ஞானதேசிக மூர்த்தம் எங்கள் குருநாதனென நாம் கொண்டாடும் யோகர் சுவாமிகள்.*

*இறைவன் அவ்வப்போது மகரிஷிகளுக்குக் காட்டிய சன்மார்க்கத்தையே யோகர் சுவாமிகள் எனும் அருள்மேனி தாங்கியும் காட்டினார். ஆதலால் யோகசுவாமிகள் காட்டிய மார்க்கம் மூலகுருவாகிய தசஷிணாமூர்த்தம் முதலாய் வாழையடி வாழையாக வந்த தீர்க்கமான சன்மார்க்கம். அவர் தமது அனுபவ சித்தாந்தத்தையே அடியவர்க்கு எடுத்துரைத்தார். அதாவது சொந்த அனுபவத்தில் உண்மையை உணர்ந்து, அவ்வுண்மையுணர்ச்சி நிலையில் சற்றும் திரியாது குன்று போல் நின்ற அவரகத்தினின்றே அவர்தம் திருவாய் மொழிகள் மலர்ந்தன. ஆதலால் அவர்தம் வாய்மொழிகளை மிகத் தெளிவாகவும் சுருக்கமாகவும் எளிமையாகவும் இனியனவாகவும் அமைந்தன. அவ்வாய் மொழிகள் அன்பர்களது அகங்களில் நன்மருந்தாயச் சுவறி அவர்களுக்குச் சுகமருள வேண்டுமென்றும் கருணையால் மலர்ந்த அருளமுதமாகையாலே அவை ஆற்றல்வாய்ந்த மந்திர மொழிகளாயின.*

*சுவாமிகளது எளிமை ஆதிய பண்புகள் நிறைந்த வாய்மொழிகளுக்கு எடுத்துக்காட்டாக மேல்வரும் திருமுகத்தைக் கொள்ளலாம்.*

*''உனக்குச் சொல்வதற்கு ஒன்றுமில்லை. நாங்களெல்லாம் தேவ சந்நிதானத்தில் இருக்கிறோம். இது ஒரு பெரும் சத்தியம் . யாவும் இருந்தபடியே நடந்துவருகிறது. கிலேசமோ, அன்போ, பகையோ இவை யாவும் பகவானுடைய விளையாட்டு. இவை என்றும் இப்படியே. நாமும் அப்படியே. பிறப்பைப் போல இறப்பு. புகழைப் போல இகழ்ச்சி. நன்மையைப் போலத் தீமை. முழுதும் உண்மை. முன்னிலையில் இன்றித் தன்னிலையில் யாவும். இயங்காமல் இயங்கு. முடிவைக் காணோம்.*

**அதுதான் சுற்றிச் சுற்றி சுப்பருடைய கொல்லை.** *நம்மவர் நாவில் பயிலும் பழகு தமிழ்மொழி ஒன்றை எடுத்துக் காட்டாகக் கொண்டு, 'முன்னிலை இன்றித் தன்னிலையில் யாவும்' என்ற முழு உண்மையைச் சுவாமிகள் தெளிவுபடுத்தியிருக்கிறார். சுவாமிகளது நற்சிந்தனையிலே இப்படி எத்தனையோ அமுதமொழிகள் உள்ளன. இவற்றை மனதிற் பதித்து உய்தி பெற நாடுதலே இக்குருபூசை நாளின் சிறந்த பூசனையாம்.*

- சிவதொண்டன் சபையார்.

# மக்கள் முகம்

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடந்த ஐந்து வருடங்களாகப் பிரதம மருந்தாளராகக் கடமையாற்றிய இ.சுனேந்திரன் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

* * *

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியின் ஆசிரியராகிய இரத்தினசபாபதி சிவசங்கர் 01.03.2008ஆம் திகதி முதல் செயற்படும்படியாக யா/கரவெட்டி கிழக்கு அ.த.க.பாடசாலையில் கடமை நிறைவேற்று அதிபராக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரால் நியமிக்கப்பட்டுள்ளார்.

* * *

வல்வெட்டித்துறை நகரசபை வருமான மேற்பார்வையாளர் ஏ.வைகுந்தநாதன் (அகில இலங்கைச் சமாதான நீத வான்) 33 வருட உள்ளூராட்சி அரச சேவையிலிருந்து மார்ச் மாதம் 17ஆம் திகதி ஓய்வு பெற்றுள்ளார்.



1972ஆம் ஆண்டு யாழ்.மாநகர சபை பாதுகாப்பு உத்தியோகத்தராக நியமனம் பெற்ற வைகுந்தநாதன் பின்னர் வருமான மேற்பார்வையாளராக நியமனம் பெற்றார். உடுவில் பிரதேச சபையில் வருமான மேற்பார்வையாளராக பணியாற்றிய பின் வல்வெட்டித்துறை நகரசபைக்கு இடம்மாற்றப்பட்டு பணியாற்றி வந்தார்.

# புனரமைக்கப்பட்டு எழிற் கோலம் பூண்டுள்ள— செல்வச்சந்நிதியுறை அன்னதானக் கந்தனின் ஆலயம்


புதிதாக அமைக்கப்பட்ட ஆலய மண்டபங்களில் ஒன்று.

ஈழத்திருநாட்டின் திருத்தலங்களுள் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களுள் ஒன்றாக செல்வச்சந்நிதி ஆலயமும் விளங்குகின்றது.

மேற்படி ஆலயம் மிகப் பழமை வாய்ந்த ஆலயங்களில் ஒன்றாகும். இதை அடியார்கள் செல்வக்கதிர்காமம் என்றும் சின்னக் கதிர்காமம் என்றும் அழைப்பர். அன்னதானக் கந்தன் என்று முருகனைப் பக்திபூர்வமாக அழைப்பர்.

இவ்வாலயம் பழமைவாய்ந்ததன் காரணமாக ஆலயத்தின் பகுதிகள் அனைத்தும் சேதமடைந்துள்ளன.

இவற்றைப் பல காலமாகத் திருத்தங்கள் செய்வதற்கு முயற்சிகள் எடுத்தபோதும் அவை எளிதில் நிறைவேறவில்லை.

முருக பக்தர்களின் தீவிர முயற்சி காரணமாகக் குறிப்பாக தென்மராட்சி, கைதடியைச் சேர்ந்தவரான தம்பிநாதன் வேலாயுதம் என்பவரின் 2 கோடி ரூபா நிதி முதலீட்டுடன் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டபோது உலகின் அனைத்துப் பாகத்திலும் இருந்து அடியார்கள் நிதி உதவிகளைச் செய்ய முன்வந்தனர்.

இவர்களின் நிதி உதவியுடன் ஆலயம் முற்றுமுழுதாகப் புனரமைக்கப்பட்டு வருகின்றது. தற்போது 10 கோடியே 77 லட்சம் ரூபா செலவில் ஆலயப் புனரமைப்பு வேலைகள் நடைபெற்று முழுமையடையும் நிலைக்கு வந்துள்ளன.


வள்ளியம்மன் வாயில் மண்டபம்

இந்த ஆலய பரிவார மூர்த்திகளான பிள்ளையார், முருகன், வள்ளி, ஆறுமுகசுவாமி, வைரவர், சரஸ்வதி ஆகியோருக்குத் தனித்தனிக் கோபுரங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இவற்றுடன் மண்டபம், காண்டாமணிக் கோபுரம் ஆகியவற்றுக்கும் சேர்த்து எட்டுக் கலசங்கள் வைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடத்தப்படவுள்ளது.

அச்சுவினி நட்சத்திரமும் வளர்பிறை மூன்றாம் நாளுமாகிய எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. இந்நாளிலேயே கலச அபிஷேகங்களும் நடத்தப்படவுள்ளது.

1988ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கும்பாபிஷேக நாளான அன்றுதான் இக்கலச அபிஷேகம் இடம்பெறவுள்ளது.

புனருத்தாரணம் செய்யப்பட்டுள்ள ஆலயத்தின் உட்புறச் சுவர்களில் கந்தப் பெருமானின் வரலாற்றுச் சிறப்புமிக்க கதைகள் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. இவை இந்த ஆலயத்தின் அழகை மேலும் மெருகூட்டுவனவாகக் காணப்படுகின்றன. பல கோடி ரூபா செலவில் புனரமைக்கப்பட்டு இப்போது எழிற்கோலம் பூண்டுள்ளது அழகன் முருகன் - அன்னதானக் கந்தன் - உறைந்துள்ள செல்வச்சந்நிதி.


மூலஸ்தானத்தின் பின்பக்கத் தோற்றம்

எதிர்வரும் 7ஆம் திகதி உதயபூசையுடன் கும்பாபிஷேக பூசைகள் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. செல்வச்சந்நிதி ஆலய பிரதம பூசகர் விசாகரத்தினம் தெய்வேந்திர ஐயர் தலைமையில் கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

- வல்லிமகனார்.

## மருத்துவமுகாம்

யாழ்ப்பாணம், மார்ச்28

சுன்னாகம் லயன்ஸ் கழகம் நடத்தும் இலவச மருத்துவமுகாம் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை புன்னாலைக்கட்டுவன் தெற்கு அ.த.க.பாடசாலையில் நடைபெறவுள்ளது.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு, புன்னாலைக்கட்டுவன் வடக்கு, ஈவினை, குப்பிளான் தெற்கு, குப்பிளான் வடக்கு ஆகிய கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் இம்முகாமில் பங்கு பற்றிப் பயனடையலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202)

## தமிழ்ப் பெண்ணை மணம் முடித்த முஸ்லிம் வாலிபர் கொழும்பில் கைது

கொழும்பு, மார்ச்28

கொழும்பு குணசிங்கபுரத்தைச் சேர்ந்தவரும் தமிழ்ப் பெண்ணை திருமணம் முடித்தவருமான முஸ்லிம் வாலிபர் ஒருவரை வெள்ளை வானில் வந்த சிவில் உடைக்காரர்களும் அதிரடிப்படை உடை அணிந்த ஒருவரும் கைவிலங்கிட்டு அழைத்துச் சென்றனர் எனவும் - அவரைப்பற்றி தகவல் அறியமுடியாமல் இருக்கிறது எனவும், அவரது மனைவி வாழ்க்கைத் தொழில், தொழில்நுட்பப் பயிற்சி பிரதி அமைச்சர் பெ. இராதாகிருஷ்ணனிடமும், மனித உரிமைகள் ஆணைக்குழு, கெசல்வத்தை பொலிஸ் நிலையம் ஆகியவற்றில் முறைப்பாடுகள் செய்துள்ளார்

- இவ்வாறு பிரதியமைச்சரின் ஊடகப்பிரிவு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கொழும்பு குணசிங்கபுரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிவகுமார் என்றழைக்கப்படும் பி.ஏ.எம். ரபீக் (வயது 40) என்ற ஒட்டோச் சாரதியே கடந்த 20ஆம் திகதி இரவு 9.30 மணியளவில் இவ்வாறு அழைத்துச் செல்லப்பட்டுள்ளார்- என்றுள்ளது. (சி)


## கொக்குவில் இந்து - யாழ்.இந்து

மாபெரும் கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு

உதயன்

மாணவர்களுக்கும் பாடசாலைகளுக்கும் வழங்கும் விஷேட பரிசில்கள்.

மாணவர்களே! நீங்கள் எல்லோரும் வயது, வகுப்பு வேறுபாடின்றி இப் போட்டியில் கலந்து கொள்ளலாம்.

*ஒரே கேள்வி - பதிலளித்துப் பரிசு பெறுங்கள்*

**பணப் பரிசில்கள்**

| மாணவர்களுக்கு | பாடசாலைகளுக்கு |
|---|---|
| 1) ரூ. 5,000/= | 1) ரூ. 10,000/= |
| 2) ரூ. 3,000/= | 2) ரூ. 5,000/= |
| 3) ரூ. 1,500/= | 3) ரூ. 3,000/= |

போட்டி விதிகள்

* குடாநாட்டில் உள்ள சகல பாடசாலைகளையும் சேர்ந்த மாணவர்கள் இப்போட்டியில் பங்குபற்லாம்.
* இப்போட்டி பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமே.
* விடையை கீழே உள்ள கூப்பனில் நிரப்பி பாடசாலை அதிபரிடம் அல்லது பகுதித் தலைவரிடம் ஒப்படைக்கவும்.
* விடைக்கூப்பனை பாடசாலை அதிபர் அல்லது பகுதித் தலைவரைக் கொண்டு உறுதிப்படுத்துவது அவசியம்
* பாடசாலைகள் தமது மாணவர்களின் கூப்பன்களைச் சேர்த்து வைத்து நாளை 29.03.2008 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் உதயன் அலுவலகத்தில் ஒப்படைக்கலாம்.

உதயன் அலுவலகத்தில் இதற்கென வைக்கப்பட்டிருக்கும் பெட்டியிலும் கூப்பன்களை இடலாம்.

கொக்குவில் இந்து - யாழ்.இந்து
மாபெரும் கிரிக்கெட் போட்டி - 2008
மாணவர்களுக்கு உதயன் நடத்தும் விஷேட போட்டி

மாணவனின் பெயர்:........................................

பாடசாலையின் பெயர்:........................................

இப்போட்டியில்........................................

கிரிக்கெட் குழுவே வெல்லும்.

........................................ ........................................
மாணவனின் கையொப்பம் அதிபர் அல்லது பகுதித் தலைவரின் கையொப்பம்

*இக் கேள்விக்கு மட்டும் பதில் அளியுங்கள்.*

எதிர்வரும் 29 ஆம் 30 ஆம் திகதிகளில் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ள கொக்குவில் இந்துக் கல்லூரி - யாழ். இந்துக் கல்லூரி இடையேயான கிரிக்கெட் போட்டியில் வெல்லப் போகும் பாடசாலை அணி எது?


# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் நிலைப்பாடு வார முடிவில்தான்!

## அரசுடன் கூட்டு இல்லை; ஐ.தே.கவுடன் தொடர்ந்து பேச்சு

கொழும்பு, மார்ச்.28

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எந்த அணியுடன் கூட்டமைத்துப் போட்டியிடும் என்பது பெரும்பாலும் இவ்வார இறுதியில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை அளவில் - தீர்மானிக்கப்படும் எனத் தெரிகின்றது.

எனினும், ஏனைய முஸ்லிம் கட்சிகளுடனோ, ஆளும் தரப்புடனோ முஸ்லிம் காங்கிரஸ் தேர்தலில் இணைந்து போட்டியிடுவதற்கான வாய்ப்புகள் பெரும்பாலும் இல்லை என்றும் -

ஐக்கிய தேசியக் கட்சியுடன் போட்டியிடுவதற்கான வாய்ப்புகள் குறித்து இரு தரப்பும் தொடர்ந்து பேசி வருகின்றன என்றும் -

முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் மூத்த உறுப்பினர் ஒருவர் நேற்றுமுன்தினம் மாலை 'சுடர்ஒளி'க்குத் தெரிவித்தார்.

கட்சித் தலைவர் ரவூப் ஹக்கீம் நேற்றுக் காலையும் ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவைச் சந்தித்து இவ்விவகாரம் குறித்துப் பேசினார் என்றும் -

எனினும், உறுதியான முடிவு ஏதும் எட்டப்படவில்லை என்றும் -

அந்த மூத்த உறுப்பினர் மேலும் தெரிவித்தார்.

''ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனித்துப் போட்டியிடுவதையே அதிகம் விரும்புகின்றது. ஐ.தே.கட்சியும் தனித்துப் போட்டியிடலாம். காத்திரமான தமிழ் வேட்பாளர்களை நிறுத்தி, தமிழ்த் தேசியம் தொடர்பான தனது நிலைப்பாட்டை ஐ.தே.க. தெளிவுபடுத்துமானால் கணிசமான வாக்குகளை ஐ.தே.கட்சி பெறமுடியும். அதன்பின்னர் கூட்டுச் சேர்ந்து அங்கு மாகாண ஆட்சியை அமைப்பது குறித்து ஐ.தே.கட்சியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் முயற்சிக்கலாம் என்ற ஒரு சிந்தனையும் நிலவுகின்றது.

''எனினும் மு.காங்கிரஸும், ஐ.தே.கட்சியும் பிரிந்து நின்று தனித்தனியாகத் தேர்தலில் போட்டியிட்டால் போனஸ் ஆசனங்கள் இரண்டைக் கோட்டை விட வேண்டி நேரிடலாம் என ஐ.தே.கட்சி சுட்டிக்காட்டுகின்றது. இதன் காரணமாகவே இரண்டு கட்சிகளும் இணைந்து தேர்தலில் போட்டியிடவேண்டும் என ஐ.தே.க.வற்புறுத்துகின்றது. இது குறித்து நாம் ஆழமாகப் பரிசீலித்து வருகிறோம். எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமைக்கு முன்னர் ஒரு இறுதி முடிவுக்கு நாம் வந்து விடுவோம்.'' - என்றார் அவர். (சி)

# சட்டி, பானையை நடுவீதியில் போட்டுடைத்து மறியற்போர்!

## ஏப். 3இல் தொகுதி தோறும் ஐ.தே.க. நடத்தும்

கொழும்பு, மார்ச்.28

விலைவாசி அதிகரிப்புக்கு முகம்கொடுக்க முடியாமல் மக்கள் படும் கஷ்டத்தை வெளிப்படுத்தும் முகமாக எதிர்வரும் 3ஆம் திகதி நாடு தழுவிய ரீதியில் தேர்தல் தொகுதி தோறும் மக்கள் போராட்டங்களை நடத்த அழைப்பு விடுத்திருக்கும் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க., அன்றைய போராட்டத்தை விநோதமான முறையில் முன்னெடுக்கவும் தீர்மானித்திருப்பதாகத் தெரிகின்றது.

அந்தப் போராட்டத்தில் ஈடுபடும் பொதுமக்கள் கைகளில் சட்டி, பானைகளைத் தாங்கி வந்து, நடு வீதிகளில் அவற்றைப் போட்டுடைத்த பின்னர், வீதியில் மறியல் போரில் ஈடுபடுவர் என்று கூறப்படுகின்றது.

இது நாடு தழுவிய ரீதியில் - தொகுதிகள் தோறும் - அன்றைய தினம் ஒரேவேளையில் மேற்கொள்ளப்படும் என்று கூறப்படுகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரான எஸ்.பி. திஸநாயக்க நேற்றுமுன்தினம் இடம்பெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இந்தப் போராட்டம் குறித்து விளக்கமளித்தார் என்றும் அறியவந்தது. (சி)

# இஸ்ரேல் - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்து

கொழும்பு, மார்ச்28

இலங்கைக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் கலாசாரம், விஞ்ஞானம் மற்றும் கல்வி தொடர்பான விடயங்களில் பரஸ்பர ஒத்துழைப்புக்கான ஒப்பந்தமொன்று நேற்று முன்தினம் கைச்சாத்திடப்பட்டுள்ளது என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இஸ்ரேலுக்கு நான்கு நாள் உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ள பிரதமர் ரட்ணசிறி விக்ரமநாயக்க இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார். இஸ்ரேலின் உதவிப் பிரதமரும் வெளிவிவகார அமைச்சருமான ரிஸிப்பி லிவ்னி இஸ்ரேல் நாட்டின் சார்பில் கைச்சாத்திட்டார்.

இதேவேளை, இஸ்ரேல் ஜனாதிபதி சைமன் பெரொஸ், பிரதமர் எகுட் ஒல்மட் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் எகுட் பராக் ஆகியோருடனும் பிரதமர் ரட்ணசிறி விக்ரம நாயக்க நேற்றுமுன்தினம் பேச்சுகளை நடத்தினார். (சி)

உதயன்

தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இராணுவ வெற்றி இலக்கு என்ற கானல் நீரை நோக்கிய ஓட்டம்

ஈழத் தமிழர்களின் தேசிய இனப்பிரச்சினை இலங்கையின் முதன்மையான பிணக்காக முனைப் புற்று, தீவிரமடைந்து நிற்கின்றது.

தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காத வரை - அவர்களது நியாயமான அபிலாஷைகள் நிறைவேறாத வரை - இத்தீவில் சமாதானமும், ஒத்திசைவும், நல்லிணக்கமும், பொருளாதார மேம்பாடும், அமைதியான வாழ்வும் சாத்தியமேயில்லை என்பதை சம்பந்தப்பட்ட தரப்புகள் உணரவேண்டும்.

சிங்களப் பேரினவாத மேலாதிக்கத் திமிருடைய அரசியல்வாதிகளினதும், அவர்களை ஒட்டி நிற்கும் அதிகார வர்க்கத்தினதும் இனவாத அடக்குமுறைக் கொள்கைப் போக்குக் காரணமாகவே தமிழ், சிங்கள மக்கள் இடையே முரண்பாடு முற்றும் அவல நிலைமை ஏற்பட்டிருக்கின்றது; அது கொடூரப் போராக வெடிக்கும் பேரபாயமும் நேர்ந்திருக்கின்றது.

தமிழ் மக்களை அடிமைகொண்டு, தனது மேலதிகாரத்தை நிலைநிறுத்த முயலும் சிங்கள அரசுக்கும், அதற்கு எதிராகத் தமிழர் தரப்பில் கிளர்ந்தெழுந்து விடுதலை வேணவாவுடன் சுதந்திர வேள்வியில் குதித்திருக்கும் புலிகளுக்கும் இடையிலான இந்தப் போர், முழு இலங்கைத் தீவையுமே மோசமாகப் பின்னடைவுக்குள் தள்ளியிருக்கின்றது.

இந்த அநியாய ஆக்கிரமிப்புப்போர் அப்பாவித் தமிழ் மக்களை மாத்திரமல்லாமல் அப்பாவிச் சிங்கள மக்களையும் ஆழமாகப் பாதித்து நிற்கின்றது. போர்வெறி கொண்ட அடக்குமுறைத் தீவிரம் காரணமாக ஒன்றுமறியா அப்பாவிச் சிங்கள இளைஞர்களினது உயிர்களும் பல்லாயிரக்கணக்கில் அநியாயமாகக் காவு கொள்ளப்படுகின்றன. இந்தப் போரினால் எழுந்துள்ள தாக்கமான பொருளாதாரச் சுமையையும் சீரழிவுகளையும் தென்னிலங்கையும் சேர்ந்துதான் இன்று சுமக்கவேண்டியிருக்கின்றது.

இக் கொடிய போருக்கு முடிவுகட்டி, நிரந்தர சமாதானத்தையும், நிலையான அமைதியையும் எட்டுவதாயின் அதற்கு இராணுவ வெற்றிகளை நிலைநிறுத்த எண்ணும் இந்த யுத்த தீவிர வெறிப்போக்கு உதவப்போவதில்லை. இனவாத சக்திகளை இனங்கண்டு அவற்றை ஒதுக்குவதோடு, சிறுபான்மையினரின் மனதை வெல்லத்தக்க நகர்வுகளையும் ஆட்சியாளர்கள் முன்னெடுக்க வேண்டும்.

பாதிக்கப்பட்ட தரப்புகளின் மனதை வெல்வதை விடுத்து, அவர்களை இராணுவ ரீதியில் தோற்கடிக்க முயல்வது இன்னும் மோசமான பின்விளைவுகளையே ஏற்படுத்தும்; இரு சமூகங்கள் இடையேயான இன சமரசத்தை சீர்கெடுத்து, நிரந்தரப் பகையுறவையும், விரோதப் போக்கையும் தீவிரப்படுத்தும். இரண்டு தேசியங்கள் இடையேயும் மீளச் சீர் செய்யமுடியாத ஆழமான வடுவையும் குரோதத்தையும் நிலையாக - ஆழமாக - பொறித்துவிடும்.

அது மாத்திரமல்ல. இன்றைய களச் சூழ்நிலையில் யுத்த வெற்றிகள் குறித்த அரசின் அதீத பிரசாரங்களும் 'கோயபல்ஸ்' பாணி அறிவிப்புகளும் தென்னிலங்கை மக்களின் மனதில் விஷமத்தனமான - குரூரமான - ஒரு குருட்டு நம்பிக்கையை ஆழமாகப் பதித்து வருவதும் விரைந்து கவனிக்கப்பட வேண்டிய ஒரு விவகாரமாகும்.

தென்னிலங்கை இன்னும் கொஞ்சம் மூச்சுப்பிடித்து, முறுகி நின்று, யுத்தத்தைத் தீவிரப்படுத்துமானால், விடுதலைப் புலிகளைக் கூண்டோடு அழித்து, அதன்மூலம் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான - நிலையான - ஸ்திரமான - தீர்வு கண்டுவிடலாம் என்ற அந்த அதீத நம்பிக்கையை இந்தப் பிரசாரங்கள் தென்னிலங்கை மக்களுக்குத் திட்டமிட்டு ஊட்டிவருகின்றன.

தமிழர்களின் போராட்ட வலுவாக விளங்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்தை சிதைத்து, இனப்பிரச்சினை விவகாரத்தில் சிறுபான்மையினர் தரப்பின் பேரம் பேசும் வலுவை நாசமாக்கிய பின்னர், தீர்வுத் திட்டம் என்ற பெயரில் தான் சமர்ப்பிக்கும் உருப்படியற்ற கட்டமைப்பு ஒன்றை சிறுபான்மையினரான தமிழர்கள் மீது வெற்றிகரமாகத் திணிக்கலாம் என்று தென்னிலங்கையின் அரசுத் தலைமைகள் நப்பாசை கொள்கின்றன; அதன் அடிப்படையில் மிதமிஞ்சிய நம்பிக்கையைத் தென்னிலங்கை மக்களுக்கு ஊட்டுகின்றன.

இந்த மணல் கயிறை நம்பி, பேரினவாதச் சிந்தனைச் சகதிக்குள் தென்னிலங்கைச் சமூகம் மெல்ல மெல்ல மூழ்கிக் கொண்டிருக்கிறது.

இதனால் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான - நீதியான - சகல தரப்பும் ஏற்கக்கூடிய - ஒரு நிரந்தரத் தீர்வைஎட்டுவதற்கானஎதிர்காலச்சாத்தியங்களும்அருகிக்கொண்டிருக்கின்றன.

சமவுரிமைகளுக்கான - கௌரவ வாழ்வுக்கான - ஈழத் தமிழர்களின் சுதந்திரப் போராட்டம் ஆயுத வழிக்குத் திரும்பி, மூன்று தசாப்த காலமாகிவிட்டது.

அந்த உரிமைப்போரை இதோ அடக்கி விடுவோம் என்ற இலக்குடன் கடந்த முப்பது ஆண்டுகளாகக் காய்களை நகர்த்திக் களைத்துப்போன தென்னிலங்கை, அந்தப் பட்டறிவில் இருந்து சரியான பாடத்தைக் கற்றறியாமல், இன்னும் கானல் நீர் போன்ற அந்த இராணுவ அடக்குமுறை வெற்றியை நோக்கி ஓடிக்கொண்டிருப்பது அதன் அறிவின்மையையே பறைசாற்றுகின்றது.

# இலங்கையின் உள்நாட்டு விடயங்களில் ஐரோப்பிய ஒன்றியம் தலையிடமாட்டாது

## அதன் வதிவிடப்பிரதிநிதி தெரிவிப்பு

கொழும்பு, மார்ச்.28

"இலங்கையில் தற்போது பல்வேறு தரப்பட்ட பிரச்சினைகள் எழுந்துள்ளன. இருப்பினும் அத்தகைய எந்த பிரச்சினைகளும் இல்லை என இலங்கை அரசு கூறுகின்றது உள்நாட்டு விடயங்களில் நாம் தலையிட விரும்பவில்லை"

இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி ஜே. வில்சன் தெரிவித்திருக்கிறார்.

"இலங்கைக்கு நாம் உதவி வழங்குவதில் நாம் நண்பராகச் செயற்பட்டு வருகின்றோம். ஆனால் இலங்கையின் உள்ளார்ந்த பிரச்சினைகளில் நாம் தலையிட விரும்பவில்லை"- என்றும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கை சமாதானப் பேரவையின் தேசிய பிரச்சினை மற்றும் 13 ஆவது திருத்தம் தொடர்பிலான கருத்தரங்கு, 'இருதசாப்த யுத்தத்தால் ஐந்து வருட யுத்த நிறுத்தம் அடுத்து என்ன?' என்ற நூல் வெளியீடும் நேற்றுமுன்தினம் மாலை கொழும்பு, ஜே. ஆர். ஜெயவர்த்தன கேந்திர மண்டபத்தில் இடம் பெற்றன இந்நிகழ்வில் கலந்து கெண்டு உரையாற்றியபோதே ஜே. வில்சன் இவ்வாறு தெரிவித்துள்ளார் அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் கூறியவை வருமாறு:-

2002 ஆம் ஆண்டிலிருந்து நாம் இலங்கையில் செயற்பட்டுவருகின்றோம் 2003இல் எம்மிடம் இலங்கையின் சமாதானம் மற்றும் போர் நிறுத்தம் என்பன குறித்து எம்மிடம் கலந்துரையாடப்பட்டது. சில சந்தர்ப்பங்களில் நடுநிலைமையாக செயற்படும்படியும் எங்களிடம் கேட்கப்பட்டது.

நாம் இலங்கைக்கு தொடர்ச்சியாக வர்த்தகம் மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கு நிதி உதவிகள் புரிந்து வருகின்றோம். இதுவரை வடக்கு -கிழக்கு மாகாணங்களின் அபிவிருத்திப் பணிகளுக்கு 40 கோடி ரூபா நிதியை வழங்கியிருக்கின்றோம்.

இலங்கை தற்போது ஒரு சிக்கலான சூழ்நிலையில் இருக்கிறது ஆனால் அப்படியானநிலைமைஒன்றும்இல்லை என்று இலங்கை அரசு கூறிவருகின்றது.

எல்லோரும் ஒன்றிணைந்து இலங்கையில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும். எமது ஐரோப்பியக் குழு ஒன்று இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டு- இங்கு குறிப்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு தமது பணிகளை நிறுத்தியபின்னர் அவர்களது பணிபுரிந்த இடங்களுக்குச் சென்று பார்வையிட்டு வந்தது. அத்துடன் நோர்வே அரசு மீது இருக்கின்ற வீண் பணிகளை இல்லாதிருக்கச் செய்ய வேண்டும் - என்றார். (சி)

# ஒத்த கருத்து ஏற்படாவிட்டால் அணு ஒப்பந்தம் அமுலாகாது!

## புஷ்ஷைச் சந்தித்த பின் பிரணாப் முகர்ஜி பேட்டி

வாஷிங்டன், மார்ச்.28

அமெரிக்காவுடனான அணுசக்தி ஒப்பந்தம் தொடர்பாக இந்தியாவில் ஒத்த கருத்து ஏற்படாவிட்டால் அதை அமுல்படுத்தமாட்டோம் என வெளியுறவுத்துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி தெரிவித்துள்ளார்.

அணுசக்தி ஒப்பந்தம் குறித்து அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷுடன் பேச்சு நடத்திய பின்னர் செய்தியாளர்களிடம் மேற்படி பிரணாப் முகர்ஜி தெரிவித்தார்.

அணுசக்தி ஒப்பந்தத்தை அமல்படுத்த மேலும் அவகாசம் வழங்கும்படி, புஷ்ஷிடம் கோரிக்கை விடுத்தார் என்றும் அவர் தெரிவித்தார்.

### அமெரிக்க ஜனாதிபதியுடன் சந்திப்பு

இந்திய வெளியுறவு அமைச்சர் பிரணாப் முகர்ஜி அமெரிக்காவில் சுற்றுப்பயணம் செய்து வருகிறார். கடந்த திங்கட்கிழமை மாலை, தலைநகர் வாஷிங்டனில் உள்ள வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷை பிரணாப் முகர்ஜி சந்தித்துப் பேசினார்.

35 நிமிடங்கள் நீடித்த இந்த பேச்சின்போது, இந்தியா - அமெரிக்கா அணுசக்தி ஒத்துழைப்பு ஒப்பந்தம் உள்ளிட்ட இரு நாடுகளுக்கு இடையே பரஸ்பர நல்லுறவு தொடர்பான முக்கிய அம்சங்கள் இடம்பெற்றிருந்தன.

பேச்சுக்கள் நல்ல முறையில் சுமுகமாக நடைபெற்றன என அறிவிக்கப்பட்டது. இரு தரப்பு பேச்சின்போது, பிரணாப் முகர்ஜியுடன் அமெரிக்காவில் உள்ள இந்தியத் தூதர் ரோனன்சென், வெளியுறவுச் செயலாளர் சிவசங்கர் மேனன், அமெரிக்காவில் உள்ள இந்தியத் தூதுக்குழுவின் துணைத் தலைவர் ரமீந்தர்சிங் ஜஸ்ஸால், வெளியுறவுத்துறை இணை செயலாளர் காயத்ரி குமார் ஆகியோர் பங்கேற்றனர்.

இருதரப்பு பேச்சுக்கள் குறித்து வாஷிங்ரனில் கடந்த செவ்வாய்க் கிழமை செய்தியாளர்களுக்கு பிரணாப் விளக்கமளித்துள்ளார்.

அணுசக்தி ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதற்கு இந்தியாவில் அரசியல் ரீதியான எதிர்ப்பு இருப்பது குறித்து அவரிடம் செய்தியாளர்கள் கேட்டனர்.

இது தொடர்பாக ஒத்த கருத்தை எட்டுவதற்கு தேவையான நடவடிக்கைகளை ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு எடுத்து வருகிறது என்றார் பிரணாப். ஒப்பந்தத்துக்கு இடதுசாரிகளும் பா.ஜ.கவும் எதிர்ப்புத் தெரிவித்து வருவதைக் கவனத்தில் கொள்ளவேண்டியிருக்கிறது என்று அவர் தெரிவித்தார்.

# 'பிரபாகரன்' இயக்குநர் சென்னையில் தாக்கப்பட்டார்

சென்னை,மார்ச்28

இலங்கையில் தயாரிக்கப்பட்டுவரும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பற்றிய 'பிரபாகரன்' எனும் சர்ச்சைக்குரிய திரைப்படத்தின் சிங்கள இயக்குநர் பெரிஷ் சென்னையில் ஈழ ஆதரவாளர்களால் தாக்கப்பட்டுள்ளார் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

'பிரபாகரன்' படத்தின் 'கலர்பிரிண்ட்டுகள்' ஐ எடுக்க வந்த சமயம் இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது என அறியமுடிகின்றது.

சென்னை கே.கே. நகர் பாண்டிச்சேரி கெஸ்ட் ஹவுஸ் அருகே ஜெமினி கலர் லாப் உள்ளது. இந்த நிறுவனத்தில்,'பிரபாகரன்' என்ற சிங்கள மொழிப் படம் 'கலர் பிரிண்ட்' எடுக்கப்பட்டு இலங்கைக்கு கொண்டு செல்லப்பட இருந்தது.

'பிரபாகரன்' என்றுபெயரிடப்பட்டுள்ள அந்த சினிமாவில், விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை பற்றி தவறாக சித்தரித்திருப்பதாக கூறி ஈழத்தமிழர்கள் ஆதரவாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது சத்தம் கேட்டு லாப்பில் இருந்து வெளியே வந்த அந்த சினிமா படத்தின் இயக்குனர் பெரீஷ் என்பவரையும் ஆர்ப்பாட்டக்காரர்களில் சிலர் அடித்து உதைத்தனர். இதனால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. (சி)

# பருத்தித்துறை வீரபத்திரர் ஆலயம் புனரமைப்பு

பருத்தித்துறை, மார்ச் 28

பருத்தித்துறை கற்கோவளம் வீர பத்திரர் ஆலயம் சுமார் 2 மில்லியன் ரூபாவில் புனரமைக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலய புனரமைப்புக்கான நிதி உதவிகளை பக்தர்கள்வழங்கியிருந்தனர். (202-218)

# உள்ளூர் உற்பத்தியை மேம்படுத்த சிறந்த வீட்டுத் தோட்ட தெரிவுப் போட்டி

## யாழ்.மாவட்டத்தில் வெற்றிபெற்றவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

விவசாய அபிவிருத்தி கமநல சேவைகள் அமைச்சு தேசிய வேலைத் திட்டம் 2007-2010 இன் கீழ் உள்ளூர் உணவுப் பொருள்களின் உற்பத்தியை அதிகரிப்பதன் மூலம் உணவு உற்பத்தியில் தன்னிறைவு அடைவதுடன் போசனை மட்டத்தையும் மேம்படுத்தும் நோக்குடன் தேசிய மட்டத்தில் சிறந்தவீட்டுத் தோட்டத் தெரிவுப் போட்டி ஒன்றை நடத்தியது.

இப் போட்டியில் யாழ்.மாவட்ட மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப்பெற்ற வர்களின் விவரம் வருமாறு:

**தனியார் வீட்டுத்தோட்டம்**

த.திருக்குமார் (கோப்பாய் மத்தி), த.சண்முகம் (நெடுந்தீவு), திருமதி சு. கருணலதா (கொடிகாமம்).

**நகர வீட்டுத் தோட்டம்**

ம.போல் (யாழ்ப்பாணம்), ந.கனகநாயகம் (யாழ்ப்பாணம்), த.சந்திரா (பருத்தித்துறை).

**மாதிரி அலுவலக வளாகத் தோட்டம்**

வேலணைபிரதேச செயலகம், தெல்லிப்பழை பிரதேச செயலகம், வட்டு.கிழக்கு கிராமசேவையாளர் அலுவலகம்.

**அலுவலரின் தனிப்பட்ட வீட்டுத் தோட்டம்**

க.சிவலிங்கம் (இளவாலை), செ. பிரதாபராஜன் (கோண்டாவில் கிழக்கு), இ.சிறீரஞ்சன் (சுழிபுரம்).

**பாடசாலைத் தோட்டம்**

சென்.ஜோன்ஸ் கல்லூரி, நெல்லியடி மத்திய மகா வித்தி., குப்பிளான் விக்னேஸ்வரா மகா வித்தி.

**மாணவர் வீட்டுத் தோட்டம்**

க.அருள்குமரன்(நெல்லியடி மத்திய மகா வித்தி.- கரவேட்டி), தி. வாசுகி(வேம்படி மகளிர் கல்லூரி- சாவகச்சேரி), கு.சபீசன்(வட்டு இந்துக் கல்லூரி- பண்டத்தரிப்பு).

மாவட்ட, மாகாணமட்டத்தில் முதல் 3 இடங்களையும் பெற்ற வெற்றியாளர்களுக்கு சான்றிதழ்களும் பணப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

தேசிய மட்டத்தில் வெற்றி பெறுபவர்களுக்கு ஜனாதிபதி விருது வழங்கப்படும். அத்துடன் வெளிநாட்டுக் கல்விச் சுற்றுலாவுக்கு ஏற்பாடு செய்யப்படும் செல்வதுடன் உழவு இயந்திரம் மற்றும் நவீன தொழில் நுட்ப விவசாய உபகரணங்கள் அன்பளிப்பாக வழங்கப்படும்.

இத் தகவல்களை யாழ்.பிரதி விவசாயப் பணிப்பாளர் சி.சிவகுமார் தெரிவித்தார். (202-111)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி - 15 | 29.03.2008 |
| | சனிக்கிழமை |
| திதி: சப்தமி | பி.ப. 12.06 |
| நட்சத்திரம் : | மூலம் |
| | முன்னிரவு 08.31வரை |
| சுபநேரம் : | 03.13 - 04.43 |
| ராகுகாலம் : | 09.13 - 10.43 |



யாழ்.பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற உலக நாடக விழாவில் எடுக்கப்பட்ட படங்கள் இவை. முகத்திரை, சுனாமி, தடுமாற்றம் ஆகிய நாடகங்களின் காட்சிகளையும் அரங்கு நிறைந்த பார்வையாளர்களையும் இங்கே காணலாம்.

# யாழ்.பல்கலையில் சிறப்புற நடைபெற்ற உலக நாடக விழா நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மார்ச்28

உலக நாடக நாளையொட்டி நேற்று யாழ்.பல்கலைக்கழகத்தில் நாடக விழா சிறப்புற நடைபெற்றது.

வெறுவெளி அரங்கக் குழுவின் தலைவர் த.குமரன் தலைமையில் கைலாசபதி கலையரங்கில் நடைபெற்ற இந்நிகழ்வில் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன், பதில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.சிவலிங்கராஜா, நுண்கலைத் துறைத்தலைவர் கலாநிதி என்.கிருஷ்ணவேணி ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

பாரம்பரிய கூத்து வடிவங்களான வசந்தன் கூத்து, காத்தவராயன் கூத்து ஆகியனவும் தனிப்பாத்திரத்தின் மௌன நடிப்பில் மூடி நாடகமும் முகத்திரை, சுனாமி ஆகிய உரையற்ற நவீன நாடகங்களும், சாட்சி, தடுமாற்றம் ஆகிய சமூக நாடகங்களும் இங்கு காண்பிக்கப்பட்டன.

பல்கலைக்கழக, கல்வியியற் கல்லூரி, பாடசாலை மாணவர்களுடன் கலைஞர்கள் பலரும் பார்வையாளர்களாகப் பங்குபற்றினர். (202)

## புத்தாண்டை முன்னிட்டு சனி, ஞாயிறு தினங்களிலும் வர்த்தக நடவடிக்கை

யாழ்ப்பாணம், மார்ச் 28

தமிழ் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு சகல வர்த்தக நிறுவனங்களும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் எதிர்வரும் 13ஆம் திகதி வரையுள்ள சனி, ஞாயிறு மற்றும் வர்த்தக விடுமுறை திணங்களில் வர்த்தக நிலையங்களைத் திறந்து வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என யாழ்ப்பாண வணிகர் கழகம் அறிவித்துள்ளது.

விடுமுறை தினங்களில் பணியாற்றும் ஊழியர்களின் நலன் பேணப்பட வேண்டும் எனவும் எதிர்வரும் 13ஆம் திகதிக்குப் பின் வரும் சகல ஞாயிறு, போயா மற்றும் வர்த் தக விடுமுறை தினங்களில் வர்த்தக நிறுவ னங்களை மூடி ஊழியர்களுக்கு விடுமுறை வழங்க வேண்டும் எனவும் வணிகர் கழகம் கேட்டுள்ளது. (202)

## கொடிகாமத்தில் சிப்பாய் மரணம்

யாழ்ப்பாணம், மார்ச் 28

மின்சாரம் தாக்கியதாக கூறப்படும் சம்பவத்தில் சிப்பாய் ஒருவர் பலியானார்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மீசாலை வடக்கு, கிராமாவில் பகுதியில் இடம் பெற்றது.

கொடிகாமம் படை முகாமைச் சேர்ந்த திஸாநாயக்கா முதியான் லாகே வேவி மாத்தையா என்னும் சிப்பாயே மரணமானவராவார்.

இவரது மரணம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்ததையடுத்து நீதிவான் பூர்வாங்க நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

இறந்தவரின் இச்சடலம் பலாலி படை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# இரு கைகள், ஒரு காலை இழந்தும் வாயால் தேர்வு எழுதிய மாணவன்

சென்னை, மார்ச் 28

மின்சாரம் தாக்கியமையால் இரு கைகளையும், ஒரு காலையும் இழந்த மாணவன் ஒருவன், தனது விடாமுயற்சியின் பயனாக 10ஆம் வகுப்புத் தேர்வை வாயால் எழுதி சாதனை படைத்துள்ளார்.

சென்னை திருவொற்றியூரைச் சேர்ந்தவர் கேசவன். இவரது மகன் ஜனார்த்தனம் (வயது - 16). மற்றைய சிறுவர்களைப் போலவோ துருதுருவென்று விளையாடிய இவரை, 8 ஆண்டுகளுக்கு முன்பு உடலில் மின்சாரம் பாய்ந்து கோரப்படுத்தியது. கருகிய நிலையில் அவரது இரண்டு கைகளும், ஒரு காலும் அகற்றப்பட்டன. என்றாலும் மகன் உயர்பிழைத்தானே என்று பெற்றோர் மகிழ்ந்தனர். அவர்களும் அக்கம் பக்கத்தினரும் அளித்த ஊக்கத்தால் வாயாலேயே



பென்சில், பேனா பிடித்து எழுதப் பழகினார் ஜனார்த்தனம். ஓவியம் வரைவதிலும் அபார திறமையைப் பெற்றார். திருவொற்றியூர் ரெடிமர் மெட்ரிக் பாடசாலையில் படிப்பையும் தொடர்ந்தார். படிப்பில் படுசுட்டியாக திகழ்கின்றார் என ஜனார்த்தனத்தை ஆசிரியர்கள் பாராட்டினர்.

# வெளிநாட்டு மக்களை அணிதிரட்டும் பணியில் தமிழீழத் தேசியத் தொலைக்காட்சிசேவை

## அரசியல் துறை பொறுப்பாளர் நடேசன் புகழாரம்

கொழும்பு , மார்ச் 28

தமிழீழ விடுதலைப் பேராட்டத்திற்கும் தமிழீழ தேசியத்திற்கும் பலம் சேர்க்கும் வகையிலும் வெளிநாடுகளையும், வெளிநாட்டு மக்களையும் அணிதிரட்டுகின்ற பெரும்ப ணியை விடுதலைப் புலிகளின் தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி மேற்கொண்டு வருகின்றது.

- இவ்வாறு புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்திருக்கிறார்.

தமிழீழத்தேசியத் தொலைக்காட்சி நேற்று முன்தினம் மூன்றாவது அகவையை நிறைவு செய்து 4 ஆவது அகவையில் கால் பதிக்கின்றது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியானது பெரும் நெருக்கடிகளையும், சவால்களையும் எதிர்கொண்டு தனது பணியை முன்னேடுத்து வருகின்றது.

இத் தொலைக்காட்சியின் இலக்கும் கோட்பாடும், கொள்கையும் எமது மக்களை அரசியல் ரீதியாக ஒன்றுதிரட்டி தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கும் தமிழீழத் தேசியத்துக்கும் பலம் சேர்ப்பது மட்டுமல்லாது வெளிநாடுகளையும், வெளிநாட்டு மக்களையும், புலம்பெயர் வாழ் தமிழ்மக்களை ஆதரவாக அணிதிரட்டுவதற்கும் வழிவகுத்து வருகின்றது. - என்றார்.

தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியில் 3 ஆவது அகவை நிறைவு விழா நேற்று முற்பகல் 9 மணிக்கு தமிழீழத் தேசியத் தொலைக்காட்சி பொறுப்பாளர் துளசிச்செல்வன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பொதுச் சுடரை ஈழநிலா படைப்பகப் பொறுப்பாளர் நகுலன் ஏற்றினார்.

தமிழீழத் தேசியக் கொடியை பா.நடேசேன் ஏற்றினார். மாவீரர் பொதுப் படத்திற்கான ஈகைச் சுடர்களை நிதர்சன மகளிர் பொறுப்பாளர் ஆதி, தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியின் ஆங்கிலசேவைப்பொறுப்பாளர் யோகன் ஆகியோர் ஏற்றினர்.

மலர் வணக்கத்தை தமிழீழத் தேசியத் தொலைக்காட்சியின் ஆவணப்பகுதிப்பொறுப்பாளர் கார்த்திக் தொடக்கினார். தொடர்ந்து சிறப்புரையை பா.நடேசன் ஆற்றினார்.

நிகழ்வில் கலைஞர்கள், படைப்பாளர்கள், போராளிகள், பொறுப்பாளர் எனப் பலர் கலந்துகொண்டனர். (சி)

## பண்டிதர் சச்சிதானந்தனுக்கு அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம், மார்ச் 28

ஆரியதிராவிட பாஷாவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் பண்டிதர் க.சச்சிதானந்தன் அஞ்சலி நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கே.கே.எஸ்.வீதி, பெரியகடை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் உள்ள கீழைத்தேயக் கல்விக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சங்கத்தின் மூத்த உறுப்பினரான பண்டிதரின் சேவைகளை நினைவு கூரும் வகையில் நடைபெறவுள்ள இந்த அஞ்சலி நிகழ்விற்கு சங்கத் தலைவர் வே.தி.செல்வரத்தினம் தலைமை வகிப்பார். (202)


## கண்ணீர் அஞ்சலி



கோப்பாய் லயன்ஸ் கழகம்

We Serve

கோப்பாய் லயன்ஸ் கழக உறுப்பினர் லயன் கெ.காண்டீபனின் தாய்

திருமதி வேதரத்தினம் கெங்காதரம்

அவர்கள் லண்டனில் காலமானதையிட்டு கழக அங்கத்தவர்களாகிய நாம் அதிர்ச்சியும் கவலையும் அடைந்தோம். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(72488) கோப்பாய் லயன்ஸ் கழகம்.



## வெற்றிடமாகவுள்ள அட்டவணைப்படுத்தப்படாத ஆளணியை நிரப்புதல்

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றத்தில் கீழ்வரும் அட்டவணைப்படுத்தப்படாத ஆளணிகளை நிரப்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

விவரங்கள் பின்வருமாறு அமையும்.

| பதவி | தன்மை | தகைமைகள் |
| --- | --- | --- |
| அட்டவணைப்படுத்தப்படாத பதவி | | |
| 1. சுகாதாரத் தொழிலாளி (2வெற்றிடங்கள்) | நிரந்தரம் | 1. இலங்கைப் பிரஜையாக இருத்தல்வேண்டும்.<br>2. வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற எல்லைப் பரப்பிற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.<br>3. 18 வயதுக்கு மேற்பட்டவராகவும் 40 வயதுக்கு உட்பட்டவராகவும் இருத்தல்வேண்டும்.<br>4. நன்னடத்தையும் சிறந்த தேக ஆரோக்கியம் உடையவராகவும் இருத்தல்வேண்டும்.<br>5. தரம் 05இல் சித்தியெய்தியிருக்க வேண்டும். |
| 2. சுகாதாரத் தொழிலாளி (2 வெற்றிடங்கள்) | அமையம் | |

வல்வெட்டித்துறை நகராட்சி மன்றப் பணிமனையிலுள்ள விளம்பரப் பலகையில் ஒட்டப்பட்டிருக்கும் விண்ணப்பப் படிவத்திற்கு அமைய விண்ணப்பங்கள் நிரப்பப்பட்டு 08.04.2008ஆம் திகதிக்கு முன்னர் *செயலாளர், நகராட்சி மன்றம், வல்வெட்டித்துறை* என்ற முகவரிக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். இத்திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**கு.அமிர்தலிங்கம்,**
*செயலாளர், நகராட்சி மன்றம்,*
*வல்வெட்டித்துறை.*

(சி/552022)



## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் மீனாட்சியம்மா

கொற்றாவத்தை, பூவோடையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் மீனாட்சியம்மா நேற்று (27.03.2008) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற க.ஆறுமுகத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - தங்கம் தம்பதி யரின் அன்பு மகளும் தங்கராணி, தங்கராசா, தங்கரூபன் (ஆசிரியர், யா/கொற்.அ.மி.த.க.பாடசாலை), தங்கமலர், தங்கேஸ்வரன் ஆகியோரது பாசமிகு தாயும் நாகம்மா, காலஞ்சென்றவர்களான முருகுப்பிள்ளை, கிருஷ்ணபிள்ளை, சின்னப்பிள்ளை ஆகியோரது அன்புச் சகோதரியும் தேவராசா, சதீஸ்வரி, மாலினி (முகாமைத்துவ உதவியாளர்), சிவமூர்த்திவேல், உஷா (சிக்கன கடனுதவி கூட்டுறவுச்சங்கம்) ஆகியோரது அன்பு மாமியும் துஷ்யந்தன், நர்மதா, ஜெகன் ( பேராதனைப் பல்கலைக்கழகம், கண்டி), இளவரசன்,கோகுலன், விவேகினி, அட்சயா, அபிறாம், சாம்பவி, ராகவி, சங்கீர்த்தனன், சங்கவி, சபீதா, சபீஸ், சுதந்திரா, ரிஷிமேனன் ஆகியோரது அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நேற்று 27.03.2008 எள்ளங்குளம் இந்து மயானத்தில் பிற்பகல் 2 மணியளவில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
தங்கரூபன் *(ஆசிரியர் - மகன்)*
*(யா/கொற்றாவத்தை அ.மி.த.க. பாடசாலை)*

*பூவோடை,*
*கொற்றாவத்தை,*
*வல்வெட்டித்துறை*

(சி/552019)

# மேற்கிந்தியத் தீவுகள் மண்ணில்; வரலாறு படைத்தது இலங்கை!


வெற்றியைக் கொண்டாடும் இலங்கை அணி

கயானா, மார்ச் 28

மேற்கிந்தியத் தீவுகள் மண்ணில் முதல் டெஸ்ட் வெற்றியைப் பதிவுசெய்து வரலாறு படைத்துள்ளது இலங்கைக் கிரிக்கெட் அணி.

கயானாவில் நடைபெற்றுவந்த முதல் டெஸ்ட் போட்டியில் 437 ஓட்டங்கள் என்ற இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி, கடைசி நாள் ஆட்டநேர முடிவதற்கு சில நிமிடங்களிற்கு முன்னதாக 315 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இதன் மூலம் இலங்கை அணி 121 ஓட்டங்களால் வெற்றியைப் பதிவுசெய்தது. சமிந்த வாஸின் அபார பந்துவீச்சு அணியின் வெற்றிக்கு பக்கபலமாக இருந்தது.

இந்தப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு வெற்றி இலக்காக 437 ஓட்டங்கள் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இலங்கைக் கலைத்த மேற்கிந்தியத் தீவுகள் அணி நான்காம் நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 96 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்றுமுன்தினம் போட்டியின் ஐந்தாம் மற்றும் கடைசி நாள் ஆட்டம் நடந்தது. மேலதிகமாக 341 ஓட்டங்கள் சேர்த்தால் வெற்றி என்ற நிலையில் மேற்கிந்தியத் தீவுகளின் இரண்டாம் இன்னிங்ஸை பிராவோ 46 ஓட்டங்களுடனும், சர்வான் 34 ஓட்டங்களுடனும் ஐந்தாம் நாள் ஆட்டத்தை ஆரம்பித்தனர். இருவரும் மிகவும் நிதானமாக ஆடி ஓட்டங்களைச் சேர்த்தனர். இந்த ஜோடி தம்மிடையே 134 ஓட்டங்களைச் சேர்த்திருந்த நிலையில் - மதிய போசன இடைவேளை நெருங்கிய நிலையில் முரளிதரனின் சுழலில் அவரிடமே பிடிகொடுத்து பிராவோ ஆட்டமிழந்தார். 169 பந்துகளை எதிர்கொண்டிருந்த பிராவோ 10 பவுண்டரிகள் மற்றும் ஒரு சிக்ஸருடன் 83 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

மதியபோசன இடைவேளையின் போது மேற்கிந்தியத் தீவுகள் அணி 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 170 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. தொடர்ந்து நடைபெற்ற ஆட்டத்தில் அடுத்து களம்புகுந்தவர்களான சாமுவேல்ஸ் 10 ஓட்டங்களுடனும், சந்தர்போல் 3 ஓட்டங்களுடனும் சமிந்த வாஸின் வேகத்தில் விக்கெட்டைப் பறிகொடுத்தனர். சிறப்பாக ஆடிக்கொண்டிருந்த சர்வான் 72 ஓட்டங்களுடன் துஸரா மிராண்டோவின் பந்துவீச்சில் எல்.பி. டபிள்யூ. ஆக இலங்கை அணிக்கு நம்பிக்கை பிறந்தது.

தொடர்ந்து வந்த அணித்தலைவர் கிறிஸ் கெய்ல் மிகவும் நிதானமாக ஆடி தோல்வியைத் தவிர்க்கப் போராடினார். எனினும், மறுமுனையில் அவருக்குச் சரியான ஒத்துழைப்புக் கொடுக்க மற்றைய வீரர்கள் தவறினர். ரெயன் ஹைண்ட்ஸ் 10 ஓட்டங்களுடனும், டனிஷ் ராம்டீன் ஓர் ஓட்டத்துடனும், சுலைமான் பென் 7 ஓட்டங்களுடனும் விரைவாக ஆட்டமிழந்தனர். அப்போது மேற்கிந்தியத் தீவுகள் அணி 8 விக்கெட்டுகள் இழப்புக்கு 244 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்நிலையில் 9ஆவது விக்கெட்டில் இணைந்த கிறிஸ் கெய்ல் - ஜெரோமி ரெய்லர் ஜோடி அணியைத் தோல்வியிலிருந்து மீட்க கடுமையாகப் போராடியது. இந்த ஜோடி 14 ஓவர்கள் வரை களத்தில் நின்று இலங்கை அணிக்கு நெருக்கடியைக் கொடுத்தது. இந்நிலையில் புதிய பந்து மாற்றப்பட, சமிந்த வாஸ் மீண்டும் அச்சுறுத்த இலங்கையின் வெற்றிக்குப் பாதை திறந்தது.

நிதானமாக ஆடிக்கொண்டிருந்த ஜெரோமி ரெய்லர் 12 ஓட்டங்களுடன் வாஸின் வேகத்தில் டில்சானிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார். தொடர்ந்து களம்புகுந்த டரன் பவலும் வாஸின் பந்துவீச்சில் சரணடைய, இலங்கை அணி மேற்கிந்தியத் தீவுகள் மண்ணில் வரலாற்று வெற்றியைப் பதிவுசெய்தது.

முடிவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 106.2 ஓவர்களில் 315 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இறுதி வரை போராடிய கிறிஸ் கெய்ல் 51 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமலிருந்தார்.

இலங்கை அணியின் பந்துவீச்சில் சமிந்த வாஸ்.61 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 5 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். முரளிதரன் 3 விக்கெட்டுகளையும், துஸரா மிராண்டோ 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள். போட்டியின் சிறப்பாட்டக்காரராக சமிந்த வாஸ் தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் இலங்கை அணி 1-0 என்ற முன்னிலையைப் பெற்றது. தொடரின் இரண்டாவது மற்றும் கடைசிப் போட்டி எதிர்வரும் 3ஆம் திகதி போர்ட் ஒவ் ஸ்பெயினில் ஆரம்பமாகவுள்ளது.

## 540 ஓட்டங்களைக் குவித்தது தென்னாபிரிக்கா

சென்னை, மார்ச் 28

சென்னையில் நடைபெற்றுவரும் முதலாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்கா அணி தனது முதல் இன்னிங்ஸில் 540 ஓட்டங்களைக் குவித்து சகல விக்கெட்டுகளையும் இழந்தது. ஹசீம் அம்லா சதம் அடித்து அணியின் ஓட்ட எண்ணிக்கை உயர்வுக்கு உதவினார்.

பதிலளித்து தனது முதல் இன்னிங்ஸை ஆடிவரும் இந்திய அணி நேற்று நிறைவு பெற்ற இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் விக்கெட் இழப்பின்றி 82 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

நேற்று ஆரம்பமான இரண்டாம் நாள் ஆட்டத்தை தென்னாபிரிக்கா அணி 4 விக்கெட் இழப்புக்கு 304 ஓட்டங்கள் என்ற நிலையில் ஆரம்பித்தது. அம்லா 85 ஓட்டங்களுடனும், டீ வில்லியர்ஸ் 10 ஓட்டங்களுடனும் நேற்றைய ஆட்டத்தை ஆரம்பித்தனர். இருவரும் தொடர்ந்து சிறப்பாக ஆடி ஓட்டங்களைக் குவித்தனர். அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய அம்லா டெஸ்ட் அரங்கில் 4ஆவது சதத்தைப் பூர்த்தி செய்து அசத்தினார்.

5ஆவது விக்கெட்டில் 66 ஓட்டங்கள் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் டீ வில்லியர்ஸ் 44 ஓட்டங்களுடன் சிறிசாந்தின் வேகத்தில் ஆட்டமிழந்தார். அடுத்துவந்த பௌச்சரும் இந்தியப் பந்துவீச்சாளர்களைச் சிறப்பாக எதிர்கொண்டார். 6ஆவது விக்கெட்டில் அம்லாவுடன் இணைந்து 99 ஓட்டங்களை பௌச்சர் சேர்த்திருந்தார். இந்நிலையில் ஹசீம் அம்லா 159 ஓட்டங்களுடன் பரிதாபகரமாக 'ரன் அவுட்' ஆனார். 262 பந்துகளை எதிர்கொண்ட அவர் 20 பவுண்டரிகளையும் தனது ஓட்ட எண்ணிக்கையில் சேர்த்திருந்தார்.

தொடர்ந்து வந்த வீரர்கள் ஹர்பஜனின் சுழலில் விரைவாக விக்கெட்டைப் பறிகொடுத்தனர். மறுமுனையில் அபாரமாக ஆடிய பௌச்சர் 70 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து ஷேவாக்கின் சுழலில் விக்கெட்டைப் பறிகொடுத்தார்.

முடிவில் தென்னாபிரிக்கா அணி தனது முதல் இன்னிங்ஸில் 540 ஓட்டங்களுக்குள் சகல விக்கெட்டுகளையும் இழந்தது. இந்தியாவின் பந்துவீச்சில் ஹர்பஜன் சிங் 5 விக்கெட்டுகளையும், கும்ளே 2 விக்கெட்டுகளையும், ஷேவாக் மற்றும் சிறிசாந்த் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலளித்து தனது முதல் இன்னிங்ஸைத் தொடக்கிய இந்திய அணிக்கு ஆரம்ப வீரர்களான ஷேவாக், ஜாபர் ஆகியோர் சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றுக்கொடுத்தனர். நேற்று நிறைவுபெற்ற இரண்டாம் நாள் ஆட்டநேர முடிவில் இந்திய அணி விக்கெட் இழப்பின்றி 82 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஷேவாக் 52 ஓட்டங்களுடனும், ஜாபர் 25 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர்.

இன்று போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டம் தொடரும்.

# தலாய் லாமாவுடன் பேச்சுகளை நடத்த சீன ஜனாதிபதிக்கு புஷ் வலியுறுத்தல்

வாஷிங்டன், மார்ச் 28

அஞ்ஞாத வாசமிருக்கும் திபெத்திய ஆன்மீகத் தலைவர் தலாய் லாமாவுடன், திபெத்திய விவகாரம் தொடர்பாக, பேச்சுகளை மேற்கொள்ளுமாறு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ், சீன ஜனாதிபதி ஹூஜின்டோவை வலியுறுத்தியுள்ளார். தொலைபேசி வாயிலாக நேரடியாக இந்த வேண்டுகோள் வைக்கப்பட்டது என அறியமுடிகின்றது.


''திபெத்தில் சட்டமும், ஒழுக்கமும், அமைதியும் சீருகுலைந்துள்ளன. இந்நிலைப்பாடு எமது அவதானிப்புக்கு உட்பட்டுள்ளது. அதேவேளை ஊடகவியலாளர்களுக்கும், இராஜதந்திரிகளுக்கும் எதிராக விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளும் தளர்த்தப்படவேண்டும்.'' - என்றும் புஷ் கேட்டுள்ளார்.

சீனாவுக்கு எதிராக திபெத்தில் தலையெடுத்த ஆர்ப்பாட்டங்களுக்குத் தலாய் லாமாவே சூத்திரதாரியாவார் என, சீனா குற்றஞ்சாட்டியுள்ளது. கடந்த இருபது வருட காலத்தில் சீனாவுக்கு எதிராக தலைதூக்கிய மிகப் பெரிய கிளர்ச்சிகள் இவை என, அவதானிகள் இந்த ஆர்ப்பாட்டங்களைக் குறிப்பிட்டுள்ளார்கள்.

இந்த நிலையிலேயே பேச்சுகளில் ஈடுபடுமாறு சீனாவை அமெரிக்க ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக வெள்ளை மாளிகை பெண் பேச்சாளர் டானா பெரினோ குறிப்பிடுகையில், ''திபெத்திய நிலைவரம் தொடர்பாக, தமது அக்கறையை அமெரிக்க ஜனாதிபதி வெளிப்படுத்தியுள்ளார்.'' - எனத் தெரிவித்துள்ளார்.

இவ்விவகாரம் தொடர்பாக, தலாய் லாமாவின் பிரதிநிதிகளுடன் பேச்சுகளை மேற்கொள்ளுமாறும் அவர் சீன அரசை ஊக்குவித்துள்ளார். ஊடகவியலாளர், இராஜதந்திரிகள் ஆகியோருக்கு எதிரான கட்டுப்பாடுகளைத் தளர்த்துமாறும் அவர் வலியுறுத்தியுள்ளார் - என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

திபெத்திய கள நிலைவரங்களைக் கண்டறிய முற்பட்ட பெருந்தொகையான வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் தடுக்கப்பட்டுள்ளார்கள். மனித உரிமைகள் அமைப்புகளின் இது தொடர்பான ஆட்சேபனைகளை அடுத்து, சீன அரசால் நேற்றுமுன்தினம் முதன்முறையாக ஊடகவியலாளர்களைக் கொண்ட குழுவொன்று, திபெத்தின் தலைநகரான லாசாவிற்குச் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.



# சீனா உடனடி மறுப்பு

பீஜிங், மார்ச் 28

தலாய்லாமாவுடன் எத்தகைய பேச்சும் நடத்தப்படமாட்டாது என சீனா நேற்று வியாழக்கிழமை திட்டவட்டமாக அறிவித்துள்ளது. அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ. புஷ் பேச்சு நடத்துமாறு கோரிக்கை விடுத்த பின்னர் சீனா இந்த மறுப்பினை வெளியிட்டுள்ளது.

ஹிமாலயப் பிராந்தியத்திலுள்ள திபெத்தில் சீனாவின் ஆட்சேபனை தெரிவித்து கடந்த இரு வாரங்களாகத் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன. இதையொட்டி புதன்கிழமை புஷ்,தலாய்லாமாவுடன் பேச்சு நடத்துமாறு தொலைபேசி மூலமாக சீன ஜனாதிபதி ஹூஜின்டோவை வலியுறுத்தியிருந்தார்.

இதற்கு சீன ஜனாதிபதி பதிலளிக்கையில், ''திபெத்துக்குச் சுதந்திரம் வழங்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை தலாய் லாமா கைவிடாதவரை அவருடன் பேச்சு நடத்துவதற்கான சாத்தியப்பாடே கிடையாது என அழுத்தமாகக் குறிப்பிட்டுள்ளார். சீனாவில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக் போட்டிகளுக்கு ஊறுவிளைவிப்பதற்கான நடவடிக்கைகளுக்கு அவர் எண்ணெய் வார்த்து வருகின்றார்.'' - என்று அவர் கூறியுள்ளார்.

பீஜிங் ஒலிம்பிக் விளையாட்டுகளுக்கு எதிரான சதி நடவடிக்கைகளை தலாய்லாமா உடனடியாக கைவிட்டுவிட வேண்டும் என்றும் சீன ஜனாதிபதி தம் பதிலில் சுட்டிக்காட்டியுள்ளார் என சீன வெளிவிவகார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆர்ப்பாட்டங்களின்போது லாசாவில் கடைத்தொகுதிகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. பல கட்டடங்கள் எரிந்து மொட்டையாகக் காட்சியளிக்கின்றன. துர்நாற்றம் அந்தப் பகுதிகளில் இன்னும் நீங்கவில்லை என 'பைனான்சியல் டைம்ஸ்' என்ற பத்திரிகை தெரிவித்துள்ளது.

# ஷியா கிளர்ச்சியாளர்கள் சரணடைய காலக்கெடு விதித்தார் ஈராக் பிரதமர்

பாக்தாத், மார்ச் 28

ஈராக்கின் பஸ்ரா பகுதியில் இராணுவத்துடன் மோதலில் ஈடுபட்டுள்ள ஷியா கிளர்ச்சியாளர்களை 72 மணித்தியாலத்திற்குள் ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டுச் சரணடையுமாறு காலக்கெடு விதித்துள்ள ஈராக்கிய பிரதமர் நூரி அல் மலிகி, சரணடையாவிடின் கடுமையான தண்டனைகளை அவர்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கும் என்றும் எச்சரித்துள்ளார்.

72 மணித்தியாலங்களுக்குள் ஆயுதங்களைக் கையளிப்பவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்போவதில்லை. அவர்கள் சரணடையாவிட்டால் சட்டம் உரிய விதத்தில் அமுல்படுத்தப்படும் என பிரதமர் குறிப்பிட்டுள்ளார் என்று பஸ்ரா கட்டளைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பஸ்ராவில் நடைபெற்றுவரும் மோதல்களில் 50இற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டுள்ள நிலையிலேயே பிரதமர் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

ஷியா மதப்பிரிவின் மொஹ்தி இராணுவத்திற்கும் ஈராக்கிய அமெரிக்கப் படையினருக்கும் இடையிலான மோதல் நகரின் பல பகுதிகளுக்கும் பரவியுள்ளது. பல ஈராக்கிய நகர்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. பஸ்ராவின் பல பகுதிகளில் இடம்பெற்ற மோதல்களில் சிக்கி 229 பொதுமக்கள் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மொஹ்தி இராணுவத்தைச் சேர்ந்த பலர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று ஈராக்கிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# 'பிரபாகரன்' பட தயாரிப்பாளர் துஷாரா கொழும்பு வைத்தியசாலையில் உண்ணாவிரதம்

கொழும்பு, மார்ச் 28

சென்னையில் தமிழ் இன ஆதரவாளர்களால் தாக்கப்பட்ட - 'பிரபாகரன்' திரைப்படத்தை இயக்கிய இலங்கையரான துஷாரா பீரிஸ் தனது திரைப்படத்தின் பிரதிகளை சென்னையிலிருந்து மீளப் பெற்றுத்தருமாறு இலங்கை - இந்திய அரசுகளைக் கோரி உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளார்.

தாக்குதலுக்காக கொழும்பு, நவலோஹா மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் துஷாரா பீரிஸ் தாம் உணவு, மருந்து மற்றும் நீரைத் தவிர்த்துவிட்டார் எனவும் தன்னைத் தாக்கியவர்களிடமிருந்து தனது திரைப்படத்தின் பிரிண்ட் பிரதிகளை மீளப் பெறுவதற்கு இந்திய - இலங்கை அரசு உதவவேண்டுமெனவும் தெரிவித்துள்ளார்.

சென்னை திரைப்படத் தொழில்நுட்பவியலாளர்கள் சங்கத்தைச் சேர்ந்தவர்களே தன்னைத் தாக்கினர் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைவர் குறித்துத் தான் படமெடுக்கிறேன் எனவும், அவருக்கு எதிரான கருத்துகள் அதில் காணப்படுகின்றன எனவும் தன்னைத் தாக்கியவர்கள் கருதினர் என்றும் துஷாரா தெரிவித்துள்ளார்.

## ஊடகவியலாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து மேற்கொள்ளப்படும் வன்முறைக் கலாசாரத்தில் உடனடி மாற்றம் ஏற்படவேண்டும் என்று அந்தக் கடிதத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

உலக ஊடக சுதந்திர தினத்தை ஒட்டியதாக நடத்தப்படவுள்ள 'ஊடகவியலாளர் மீதான போரை நிறுத்து' என்ற தொடர் நடவடிக்கையின் முதற்செயற்பாடாக மஹிந்த ராஜாவுக்கு அனுப்பப்பட்ட கடிதம் உள்ளது.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதியன்று பிரசாரச் செயற்பாட்டுக்கான உலகளாவிய நாளாக அறிவிக்கப்பட்டுள்ளது. தமிழ், சிங்கள புத்தாண்டுக் கொண்டாட்டங்களுக்கு இரண்டு நாள்கள் முன்ன தாக இத்தினம் வருவதால் தம்மையும் தங்கள் குடும்பத்தினரையும் ஆபத்து சூழ்ந்துள்ள நிலையிலும் ஊடக சுதந்திரத்துக்காக தொடர்ந்தும் போராடிக் கொண்டிருக்கும் இலங்கையில் உள்ள ஊடகவியல் அமைப்புக்களுக்கு அது நம்பிக்கையும், தெம்பும் மிக்க செய்தி யாக அமையும்.

''உலகில் ஊடகவியலாளர்களுக்கு அதிக ஆபத்துமிக்க நாடுகளில் இலங்கையும் ஒன்றாக நீண்டநாள்களாக கருதப்பட்டு வருகிறது. ஆனால், முன்னெப்போதும் இல்லாத வகையில் இப்போது நிலைமை மிகவும் பாரதூரமாக உள்ளது'' என்று சர்வதேச ஊடகவியலாளர் சம்மேளத்தின் ஆசிய பசுபிக் இயக்குநர் ஜக்குலின் பாக் கூறினார்.

தமக்கும் தமது குடும்பங்களுக்கும் உள்ள ஆபத்துகளின் மத்தி யிலும் ஊடக சுதந்திரத்துக்காகக் குரல் கொடுக்கும் இலங்கை ஊடக வியலாளர்களுக்கும் சர்வதேச ஊடகவியலாளர் அமைப்புகளும் மனித உரிமைகள் அமைப்புகளும் தமது ஆதரவையும் ஒருமைப்பாட்டையும் நல்கும் என்பதனையும் தெரிவித்து கொள்வதாக சர்வதேச ஊடக அமைப்புகள் மேலும் தெரிவித்திருக்கின்றன. (அ-2)

## கொசோவோவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் கூறியதாவது:-

மகிந்த ராஜபக்ஷவின் அரசு, 13ஆம் அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தும் நோக்கத்தை உடனடியாக கைவிட வேண்டும்.

இனரீதியாக நீதிச் சேவை மற்றும் பொலிஸ் சேவைகளை மாகாணங்களுக்கு பகிர்ந்தளிக்கும் சட்டத் திருத்தம் ஆபத்தானது. இனரீதியான அதிகாரப் பகிர்வை வழங்கக்கூடாது என்பதற்காகவே தேர்தலில் மக்கள் மஹிந்தவுக்கு வாக்களித்தனர்.

இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை நேரத்துக்கு நேரம் இடத்துக்கு இடம் முரண்பட்டு நிற்கிறது.

ஒரு பக்கத்தில் ஜனாதிபதி ஈரானுக்குச் செல்கிறார். மறுபக்கத்தில் பிரதமர் இஸ்ரேலுக்குச் செல்கிறார். இத்தகைய முரண்பட்ட நிலைப்பாட்டால் எங்களுக்கு பிரச்சினை என்று வரும்போது - நாட்டுக்கு ஆபத்து வரும் போது - உலகிலுள்ள எந்த நாடுமே எமக்கு உதவமாட்டாது இப்படி அவர் கூறினார். (அ-2)

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பயிற்சிமுகாம் ஒன்றை இலக்குவைத்து நேற்றுக்காலை 6.25 மணியளவில் விமானப்படையினர் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர் என்று படைத்தரப்பில் கூறப்பட்டிருக்கிறது. விமானப்படையினருக்குக் கிடைத்த புலனாய்வுத்தகவல்களின் அடிப்படையிலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்றும் படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் முதல் தாக்குதல் நடத்தப்பட்டு 10 நிமிடங்களின் பின்னர் பூநகரி, வலைப்பாட்டுப் பகுதியில் உள்ள விடுதலைப் புலிகளின் 'ராடர்' தளம் ஒன்றை இலக்குவைத்து பிறிதொரு விமானத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்றும் படைத்தரப்பினர் மேலும் தெரிவித்தி ருக்கின்றனர்.

எனினும், இந்தத் தாக்குதல்கள் குறித்து விடுதலைப் புலிகள் தரப்பிலிருந்து இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை தகவல்கள் எவையும் வெளிவரவில்லை. (சி)

# அராலி சரஸ்வதியில் நாளை சிரமதானப்பணி

யாழ்ப்பாணம்,மார்ச்28

அராலி சரஸ்வதி மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம் ஒழுங்கு செய்துள்ள சிரமதானப் பணியின் இரண்டாம் கட்ட நிகழ்வுகள் நாளை சனிக்கிழமை காலை 7 மணி முதல் இடம்பெறவுள்ளன.

முதலாம் கட்ட சிரமதானப் பணிகள் மகாவித்தியாலயத்தில் கடந்த வாரம் சிறப்பாக நடைபெற்றிருந்தன. இந்நிலையில் இரண்டாம் கட்டப் பணிகள் நாளை இடம்பெறவுள்ளன என்று மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் போஷகர் தெரிவித்தார். (அ-2)

## அடம்பனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காகச் சேர்க்கப்பட்டனர். சம்பவத்தையடுத்து இந்தப் பகுதியில் இராணுவத்தினர் தேடுதல் நடவடிக்கை யில் ஈடுபட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் மாலைக்கட்டித்திடல் மற்றும் செட்டிக்குளம் ஆகிய பகுதிகளில் நேற்று முன்தினம் படையினர் தாம் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில் 73 நிலக்கண்ணி வெடிகளை மீட்டிருக்கின்றனர் என்றும் படைத்தரப்பில் கூறப்பட்டுள்ளது. (சி)

## 13ஆவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் 1986ஆம் ஆண்டு ஜூலை மாதத்திற்கு முன்பு ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஜனாதிபதியாக இருந்த காலப்பகுதியில் இச்சட்டம் குறித்து கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள் மற்றும் பேச்சுக்கள் பல இடம் பெற்றன. இதில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் சிரேஷ்ட அமைச்சர்கள் மற்றும் முக்கியஸ்தர்கள் பலர் பங்குபற்றியிருந்தனர். ஆனால் எங்களின் கருத்துகள் அங்கு தெளிவுபடுத்தப்படவில்லை. ஆனால், இந்தியாவின் மாநிலம் போன்றதொரு அதிகாரம் எமக்கு வழங்கப்படும் என்று மட்டும் கூறப்பட்டது.

இந்த திருத்தச்சட்டத்தை இதுவரை ஆட்சிக்கு வந்த தரப்பினர் மக்களுக்கு திருப்தி தரக்கூடிய விதத்தில் நடைமுறைப்படுத்தவில்லை. இந்தச் சட்டம் குறித்து 1994ஆம் ஆண்டு சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் ஆராயப்பட்டு இதில் சில திருத்தங்களை மேற்கொள்ள முயற்சி எடுக்கப்பட்டது. அதுவும் இறுதியில் கைவிடப்பட்டது.

நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு அரசு ஆக்கபூர்வமானதும் முன்னோக்கிச் செல்லககூடியதுமான தீர்வு யோசனைகளை முன்வைக்க வேண்டும். தற்போதைய இனப்பிரச்சினைக்கு ஏற்றுக் கொள்ள கூடிய விதத்தில் அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு இந்த அரசு அர்ப்பணிப்புடன் செயல்படுகிறதா என எமக்குத் தெரியவில்லை.

அரசின் தீவிர அர்ப்பணிப்புத் தொடர்பில் எமக்கு கடுமையான சந்தேகங்கள் உள்ளன.

13ஆவது திடருத்தத்தை எம்மால் ஒரு போதும் ஏற்கமுடியாது. இந்தச் சட்டம் பின்னடைவான விடயம் என்பது எமக்கு தெட்டத் தெளிவாகின்றது. இதனை ஒரு போதும் செயற்படுத்த முடியாது-என்றார். (சி)

## ஐ.நா. மனித...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திபெத்தில் தனது செயற்பாடுகள் குறித்து தெரிவிக்கப்பட்ட கருத்துகளுக்கு சீனா தொடர்ச்சியாக எதிர்ப்பு வெளிப்படுத்தி வந்ததாகவும் -

மிக மோசமான மனித உரிமை மீறல்கள் இடம்பெறும் நாடுகளான இலங்கை, பாகிஸ்தான் போன்றன சீனாவுடன் இணைந்து இது குறித்த விவாதத்தை ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலில் நடக்கவிடாமல் தடுத்தன எனவும் -

மனித உரிமைகள் கண்காணிப்பகம் மேலும் தெரிவித்துள்ளது.

மனித உரிமை மீறல்கள் எங்கு நடைபெற்றாலும் கவுன்ஸில் இதுகுறித்து தீவிர கவனம் செலுத்த வேண்டுமெனவும் அது தெரிவித்துள்ளது. (சி)

## கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச அதிபர் அறிவித்துள்ளார்.

வடமாகாண முகாமைத்துவ உதவியாளர் தரம் III இற்கு மாகாண பொது அமைச்சினால் நியமனம் செய்யப்பட்ட 101 அலுவலர்களுக்குமான பிரயாண ஒழுங்கும் இன்று வெள்ளிக்கிழமைக்கே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

திருகோணமலையில் இருந்து காங்கேசன்துறை வருவதற்குப் போதிய பயணிகள் இல்லாமையினாலேயே கப்பல் சேவை உரிய திகதிகளில் நடைபெற முடியாத நிலை தோன்றியதாக நம்பத் தகுந்த வட்டாரங்களில் இருந்து தெரியவந்தது. (அ-202-2)

## குடாநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புலித் தாக்குதல் குறித்து விரிவாக என்னால் கூறமுடியாது. ஆனால், இந்த தாக்குதல் ஏற்படுத்தியுள்ள விளைவு பாரி யது. குடாநாட்டு இராணுவத்திற்கான படை விநியோகம் இந்த குறிப்பிட்ட பாதையால் தான் செல்ல வேண்டும். ஆனால், இந்த குறிப்பிட்ட பாதையை நாம் இப்போது எமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளோம். அரசின் கடல் இறைமை என்ற விடயத்தை எமது கரும்புலிகள் மீண்டும் சவாலுக்குட் படுத்தியுள்ளனர். இலங்கை அரசின் கடல் இறைமை என்பது சர்வதேச ரீதியாக கேள்விக்குரிய விடயமாக மாறியுள்ளது. எமது படைபலத்தை விட அரசின் படை பலம் பாரியது. ஆனால், எம்மிடமுள்ள மனோபலம் அவர்களிடம் இல்லை. அவர்களுக்கு யுத்தத்தில் மந்த நிலை ஏற்படுவதற்கு காரணம் அவர்களிடம் யுத்தம் செய்வதற்கான தார்மீகம் இல்லையென்பதே ஆகும். தற்போது இராணுவத்தினர் இலக்குத் தெரியாமலுள்ளனர். மனஅழுத்தம், விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

தாங்கள் செய்யும் பணியில் நம்பிக்கை இழந்துள்ளனர். இராணுவ இழப்புகளை தென்னிலங்கை ஊடகங்கள் வெளிக் கொண்டு வருகின்றன. இவ்வாறான சூழ்நிலையில், அவர்களின் மன உறுதி ஆட்டம் காணத் தொடங்கியுள்ளது. கொஞ்சம் கொஞ்சமாக சிதையுறுகிறது. கிழக்கில் படை விரிவாக்கம் செய்துள்ளார்கள். அதற்கு நாம் அவர்களை நிர்ப்பந்தித்துள்ளோம். படை விரிவாக்கத்தை தடுக்க முடியுமா என்பது அவர்களின் கைகளில் இல்லை. எமக்கு சாதகமான நிலை வரும்போது அங் குள்ள படைச்சமநிலையில் மாற்றம் ஏற்படும். - என்றார் (அ)


கணக்கீடு
P.பகீரதன்
A/L 2009
பங்குடமை
ஆரம்பம் 29.03.2008
(Sat, Sun 6.15, 7.15)
நாவலர்
ஆனைப்பந்தி,
யாழ்.நகர்

பாடசாலை அதிபர்களுக்கு.....
மாணவர்களுக்கான கணிப்பீட்டறிக்கை தரம்1 தொடக்கம் 11 வரையான கணிப்பீட்டறிக்கை எம்மிடம் விற்பனைக்குண்டு தேவையானோர் உடன் தொடர்புகொண்டு கணிப்பீட்டறிக்கையில் பாடசாலைப் பெயரை பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம்.
தயா அச்சகம்
130, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
(மனோகரா தியேட்டர் சந்தி)


ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 15 • 05 • 1932

உதிர்வு 10 • 04 • 2007



திருமதி ஒப்பிலாமணி வள்ளியம்மை

திதி: அபரபக்க அட்டமி [28.03.2008]

ஆண்டொன்று சென்றாலும்
ஆறவில்லை எம் துயரம்
ஆயிரம் உறவுகள் இருந்தும்
அவையெல்லாம் உன் அன்புக்கு ஈடாகுமா?
ஆண்டுகள் பல சென்றாலும் உங்கள்
இனிய நினைவுகள் எம்மை விட்டு நீங்காது

மருதடி, காரைநகர். (சி/552017) குடும்பத்தினர்.


நாளை ஆரம்பம்
விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
கணக்கீடு
திரு.P.பகீரதன்
A/L 2008
DAY CLASS
கிரயக் கணக்கீடு
Sat., Sun. 11.00
ஆரம்பம்
31.03.2008

BRIGHTMAN
பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்.நகர்
புதிய பிரிவு
சரளமாக உரையாட
சிங்களம்
பேராசிரியர்
திரு.லீலாக்கிருஸ்ணன்
ஆரம்பம்
29.03.2008 SAT 2.30p.m.
(Sat./Sun. 2.30p.m.)

விக்னா கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி வீதி, யாழ்.
தமிழ்
திரு.குழந்தை
A/L 2008
DAY CLASS
PAPER CLASS
ஆரம்பம்
31.03.2008 (10.30)

Personal Classes
364, Stanly Rd. Jaffna.
BA - Part I
துரித மீட்டல் வினா விடை
TAMIL :
திரு. Kதர்மராஜா
Pol.Sci., Hin.Cul, ECO, Drama
ENGLISH
30 மணித்தியால வகுப்பு
Mr.R.Maheswaran
Dip.in English
ஆரம்பம் நாளை 10 மணி

College of Accounting
பலாலி வீதி, திருநெல்வேலி
கணக்கீடு நாளை ஆரம்பம்
AAT⇒Stage I&II (sat & sun 8-9am)
CBF&DBF (sat & sun 9-10am)
By:J.T.அழகன்(B.com, HN Dip in Acc)

PHYSICS
A/L 2010
Mechanics
ஆரம்பம்:
29.03.2008
Sat3.00Pm (Sat, Sun - 3.00-4.00Pm)
By.K.Selvan
NAVALAR JAFFNA.

யாழ்.நகரில் புதிய உதயம்
புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு
அன்புடையீர்!
நிகழும் மங்களகரமான சர்வசித்து வருடம் பங்குனி மாதம் 16ஆம் நாள் (29.03.2008) சனிக்கிழமை முற்பகல் 10.45 மணி முதல் 11.15 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் எம்மால் புதிதாக திறக்கப்படவுள்ள
சிற்றிசன் போய்ஸ் செலக்ஷன் அன் ரெயிலறிங்
எனும் ஸ்தாபனத்தை இறைவன் திருவருள் துணை கொண்டு ஆரம்பிக்க இருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து நிகழ்வைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.
* இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.
தையல் இயந்திர உதிரிப்பாகங்கள், நூல் வகைகள் என்பன எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
இல.1 பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். (B)
இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்:
செ.டயேந்திரா(டயன்)


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 28.03.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.